


792
ஆலக்
SLIPR

# காலத்தின் காலடி

# காலத்தின் காலடி

தமிழ்ச்சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்
இலங்கை

**காலத்தின் காலடி**

நாட்டுக்கூத்துக்களின் தொகுப்பு

மார்ச் 1997

டெக்னோ பிரின்ட்

83, ஆஸ்பத்திரி வீதி,

களுபோவில, தெஹிவளை.

தமிழ்ச்சங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகம்

இலங்கை


# பதிப்புரை

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கமானது மாணவர்களின் அதீத முயற்சியால் கடந்த ஐந்து வருடங்களாக தொடர்ச்சியாக ஈழத்தமிழரின் நலிவுறும் கலையாம் நாட்டுக்கூத்தினை தயாரித்து மேடையேற்றிவருவது பலர் அறிந்தவொன்று. முன்பு பேராசிரியர் சு. வித்தியானந்தன் காலத்திலும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தால் நாட்டுக்கூத்துக்கள் தயாரிக்கப்பட்டு அளிக்கை செய்யப்பட்டன.அவைஅன்று நல்லதொரு விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டமை மட்டுமன்றி அவை பற்றி இன்றும் பேசப்படுகின்றமை நாம் அறிந்தவொன்று. ஆனால் கடந்த சில வருடங்களாக எம்மால் மேடையேற்றப்பட்ட நாட்டுக்கூத்துக்கள் எந்தவித விமர்சனத்தையும் பெறவில்லை. நாட்டுக் கூத்தில் துறை போனவர்கள் என்று கருதப்படுவோரும் இன்றைய பத்திரிகைகளும் ஏன் எமது நாட்டுக் கூத்துப் பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனத்தை முன்வைக்கவில்லை என்பதே இன்று எம்முன் உள்ள வினா. மாணவர்கள் மட்டுமே முயன்று செய்த முயற்சி என்பதால் தான் இந்த மாற்றந்தாய் மனப்பாங்கா? அல்லது எமது நாட்டுக் கூத்துக்கள் துறை போனவர்கள் கருதும் தரத்துக்கு வரவில்லையா? அப்படியாயின் அதனையாயினும் கூறியிருந்தால் நாம் எம்மை செம்மைப் படுத்தியிருக்கலாம் அல்லவா? உண்மையில் ஆக்கபூர்வமான விமர்சனம் கிடைக்காதமை எமக்கு மிகுந்த மன வேதனையை ஏற்படுத்தியிருந்தது. இந்த வகையில் சரிநிகர் பத்திரிகை மாத்திரமே எமது நாட்டுக் கூத்துகள் தொடர்பாக ஆக்க பூர்வமான விமர்சனத்தையும் சில ஆலோசனைகளையும் முன்வைத்திருந்தது.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் காலத்தில் மேடையேற்றப்பட்ட நாட்டுக்கூத்துக்கள் பற்றிய ஆவணங்கள் இன்று எம்மிடம் இல்லை. எமது காலத்தில் மேடையேற்றப்பட்ட நாட்டுக்கூத்துகளிற்கும் இதே போன்றதொரு நிலைமை ஏற்படக் கூடாது என்ற யோசனையே இப்புத்தக உருவாக்கத்திற்குரிய பிரதான காரணமாகும். ஏனெனில் இந்நாட்டுக் கூத்துகளில் முதலில் மேடையேற்றப்பட்ட வாலிவதையின் பிரதியைப் பெறுவதிலேயே நாம் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியிருந்தோம். இக் குறுகிய இடைவெளியிலேயே இவ்வாறானதொரு நிலைமையென்றால் இன்னும் சில காலங்கள் சென்றால் இக் கூத்துப் பிரதிகளை எடுக்க முடியாமலேயே போயிருந்திருக்கும். அந்த வகையில் இது காலத்தின் தேவையாகும்.

பொதுவாக இளைஞர்கள் பழமை பேணுவதில் முன்னிற்பதில்லையென்றவொரு கருத்து பரவலாக எல்லோர் மத்தியிலும் உண்டு. ஆனால் அக் கருத்தினை மறதலிப்பது போல பேராதனைப் பல்கலைக்கழக இளைஞர்கள் பண்டைய கலையாம் எம் தேசிய நாடகங்களை மக்கள் ரசிக்கும்படி அளிக்கை செய்தமை வரலாறு

மறக்காது. மேடையேற்றப்பட்ட இடமெல்லாம் மக்களின் ரசனைக்குப் பெரு விருந்தாயமைந்த அந் நாட்டுக் கூத்துப் பிரதிகள் நூல் வடிவில் வருவது மிகுந்த பயன்தரும் என்று நாம் நம்புகின்றோம். முன்பு வெளிவந்த நாடகப் பிரதிகளின் தொகுப்புக்கள் இன்று நாடகம் மேடையேற்ற முயலும் மாணவர்களுக்கு பெரும் பயன்விளைவிப்பது போல, இக் "காலத்தின் காலடி" நூலும் பின்னாளில் நாட்டுக் கூத்துப் போட முயல்பவர்களுக்கு பெரிதும் பயன்படும் என்பது எமது எண்ணம்.

பல்கலைக்கழக மாணவர்களது சிறுகதை, கவிதை இலக்கிய முயற்சிகள் தமிழிலக்கிய வளர்ச்சியோடு ஒப்பிடும் போது மிகவும்பின் தங்கிய நிலையிலும் நாடக முயற்சிகள் ஓரளவு போட்டி போடும் நிலையில் இருந்தாலும் எம் நாட்டுக்கூத்து அரங்க அளிக்கைகள் மாத்திரமே புலமைகள் நிபுணர்களின் முயற்சிகளுக்கு சவால் விடுமளவுக்கு நிகழ்த்திக் காட்டப்பட்டுள்ளது என்பது ஏம்முடையது மட்டுமல்ல அதனைப் பார்த்து ரசித்தவர்களினதும் எண்ணமுமாகும். அந்த வகையில் அதனை நூலுருவில் கொண்டு வருதல் ஒரு தேவையான முயற்சி என்பதில் ஐயமில்லை.

இந்த ஐந்து நாட்டுக் கூத்துக்களையும் நேரில் பார்த்து ரசித்த பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் வழங்கிய அணிந்துரை இந்நூலுக்கு மேலும் மெருகு சேர்த்திருக்கின்றது. அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகள். இந்நூலை வெளியிட வேண்டுமென்ற எண்ணத்தை எமக்கு எற்படுத்திய தா. மணிமேகலா, பி. தேவகுமாரி, வே. எ. மனோராஜ் ஆகியோருக்கும் இந்த நாட்டுக் கூத்துப் பிரதிகளை மகிழ்வோடு தந்துதவிய ஜோர்ஜ் டெல்வின் குரூஸ், கிறிஸ்டோபர் லெம்பேட் ஜுட் முரளிதரன், மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த ச. கிருபால், செ. கிள்ளிவளவன், ம. மரியராஜினி, வி. சுகர்ணா, ந. கல்யாணி, க. மாதுமை, செ. கௌரி, அட்டைப்படம் அமைக்க எம்முடன் ஒத்துழைத்த திரு. வ. பவகரன், இதனைச் சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய ரெக்னோ பிறின்ற் உரிமையாளர் கேசவன் அவர் தம் ஊழியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் என்றென்றும். இளங்கதிர் சஞ்சிகையின் வேலைப்பளுவோடு இந்நூலுக்கான வேலையையும் மேலதிகமாய் தன் தோள் மீது சுமந்த எம் இதழாசிரியருக்கு தமிழ்ச்சங்கத்தின் நன்றிகள் உரித்தாகட்டும்.

எம் நாட்டுக் கூத்துப்பற்றியும் இந்நூல் பற்றியும் ஆக்கபூர்வமான விமர்சனங்களை யாசித்து நிற்கின்றோம்.

***தமிழ்ச் சங்கம்***
***பேராதனைப் பல்கலைக்கழகம்***

# அணிந்துரை

இலங்கைத் தமிழ் நாடக வளர்ச்சிக்கு எங்கள் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் காத்திரமான பங்களிப்பினை நல்கியுள்ளது. தமிழ்ச் சங்கத்தில் பெருந்தலைவராக நீண்டகாலம் விளங்கி அதன் வளர்ச்சிக்குப் பலவாற்றாலும் உதவிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை எழுதிய நாடகங்களை 1936 ஆம் ஆண்டுமுதல் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் நாட்டின் பல பாகங்களில் மேடையேற்றியது. 'சங்கிலி' என்ற வரலாற்று நாடகமும், சமூகப்பிரச்சனைகளை மையமாகக் கொண்டு யாழ்ப்பாணத்துப் பேச்சுவழக்கினை அற்புதமாகப் பதிவு செய்யும் வகையில் அமைந்த வேறு நாடகங்களும் அவரால் எழுதப்பட்டவை.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை எழுதிய நாடகங்களைத் தயாரித்தவரான கலாநிதி சு. வித்தியானந்தன், மட்டக்களப்பு நாட்டுக்கூத்துக்கள் சிலவற்றை நவீன மேடைக்கேற்பத் தயாரித்தார். பாரம்பரியக் கலை வடிவங்களைப் பேணிக்காக்கும் ஆர்வத்தை எமது மக்களிடைத் தூண்டும் வகையில் அவர் தயாரித்த கர்ணன் போர், நொண்டி நாடகம், இராவணேசன், வாலி வதை ஆகியவை இலங்கையின் பல பாகங்களில் மேடையேற்றப்பட்டதும் தமிழ்ச் சங்கத்தின் மூலமாகவேயாகும். நான் எழுதித் தயாரித்த இரண்டு நாடகங்களை மேடையேற்றியதும் தமிழ்ச் சங்கமே. வெளியார் நாடகங்கள் சிலவற்றுக்கும், குறிப்பாக ஐம்பதுகளில், தமிழ்ச்சங்கம் பல்கலைக்கழகத்தில் மேடை அமைத்துக் கொடுத்தது.

நடிகமணி வி. வி. வைரமுத்து (காங்கேசன்துறை வசந்த கானசபை) வின் அண்ணாவி மரபு நாடகங்கள் தமிழ்ச் சங்கக் கலைவிழாக்களின் போது மேடையேற்றப்பட்டமை அந்த வகையில் குறிப்பிடத்தக்கதாகும்.

அறுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து நாடகப் போட்டிகளைத் தமிழ்ச் சங்கம் மாணவர் மத்தியில் நடாத்த ஆரம்பித்தது. நல்ல நாடகங்கள் சில தோன்ற அப்போட்டிகள் வழிவகுத்தன. காலப்போக்கில் சில நாட்டார் கூத்துக்களும் மாணவர்களினால் மேடையேற்றப்பட்டன. சமீபகாலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் பேசும் மாணவர்களிடையே வளர்ந்த ஆர்வத்தின் விளைவாக மேடையேறிய ஐந்து நாட்டார் கூத்துக்களை நூலுருவில் வெளியிடத் தமிழ்ச் சங்கம் முன்வந்துள்ளது. மேடையேற்றப்பட்ட கூத்துகள் நூலுருவில் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

கூடிவாழும் இயல்புடைய மனிதர்கள் தங்கள் அனுபவங்களையும் எண்ணங்களையும் ஏனையோருடன் பகிர்ந்து கொள்ள விழைந்தவிடத்துக் கலைகள் உதயமாகின என்பர். சாதாரண மக்களுடைய உணர்வுகளின் வெளிப்பாடுகளாகவும் உழைப்பின் மத்தியில் அவர்களுக்கு ஓய்வினையும் உற்சாகத்தினையும் அமைதியினையும் வழங்கவல்லனவாகவும் நாட்டார்

கலைகள் வளர்ந்தன. சாதாரண மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், விழுமியங்கள், மனோரதங்கள், முதலானவற்றை எடுத்துக் காட்டுவனவாகவும் நாட்டார் கலைகள் நோக்கப் படுவதுண்டு. அக்கலைகள் சில சாஸ்திரீயக் கலைகளுடன் சங்கமித்து விட்டனவாயினும் சில தமது தனித்துவத்தை இழந்துவிடாது நாட்டுப்புறங்களில் தொடர்ந்து பயிலப்பட்டு வருகின்றன. அத்தகைய கலைகளுள் ஒன்றாகக் காணப்படுவது நாட்டார் கூத்துக் கலையாகும்.

கூத்து என்பது 'குதி' என்பதன் அடியாகப் பிறந்திருக்க வேண்டும். கூத்தின் பிரதான இயக்கம் அதன் ஆட்டமேயாகும். ஆடற்கலை குதூகலத்தின் வெளிப்பாடாகவும் கலைகளுள் அழகுமிக்கதாகவும் கொள்ளப்படுவது. ஆடல் கதை தழுவி வருமிடத்துக் கூத்து எனப்படுகிறது. பெருவாரியான மக்கள் ஒன்றி உணர்ந்து அனுபவிப்பதற்கு வாய்ப்பானது கூத்து. நாட்டார் கூத்துக்களில் ஆடல் முறைகளும் இசைமுறைகளும் இணைந்து கூத்துக்களை நடாத்திச் செல்வதை அவதானிக்கலாம். ஆடல் முறைகளினதும் அங்க அசைவுகளினதும் மூலமாகப் பாத்திரப் பண்புகளையும் சந்தர்ப்பங்களையும் இலேசாக உணர்ந்து கொள்ள இயலும்.

நாட்டார் கூத்துக்கள் தமிழகத்தில் பண்டுதொட்டு வளர்ந்தமையினைச் சங்க இலக்கியங்கள் மூலமாகவும் சிலப்பதிகாரத்தின் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம். இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பல்வகைப்பட்ட நாட்டார் கூத்துக்கள் வழக்கிலிருந்தன. காலமாற்றத்துக்கு ஈடுகொடுக்க வியலாது வழக்கொழிந்தவை பலவாயினும், சில கூத்துக்கள் இன்றும் ஆங்காங்கு உயிர்வாழ்கின்றன. தனித்துவ அம்சங்கள் பொருந்திய நாட்டார் கூத்தினை உயிர்த்துடிப்புடன் பேணிவைத்த பெருமையில் கணிசமான பங்கு மன்னார்ப் பிரதேசத்துக்கு உரியது என்று கூறினால் அது மிகையாகாது.

பேராதனைப் பல்கலைக் கழகத்துக்குச் சமீபத்தில் கற்கவந்த மன்னார் மாணவர்கள் சிலருடைய ஆர்வத்தின் பேறாக மேடையேறிய கூத்துக்களே இத்தொகுதியில் இடம்பெறுகின்றன. இப்பல்கலைக் கழகத்தில் பல பீடங்களையும், பல்வேறு இனங்களையும், பல்வேறு மதங்களையும் சேர்ந்த மாணவர்கள் ஒன்றாய் வசித்து கற்கும் வசதி உளது, ஒருவர் மற்றவரிடமிருந்து கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பும் நிறைய உள்ளது. அந்த வாய்ப்புத் தக்க வகையில் பயன்படுத்தப்படுகிறதா என்ற வினா பலமாக எழுப்பப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில், தமிழ்ச் சங்கத்தின் சில செயற்பாடுகள் ஓரளவுக்காயினும் உற்சாகமளிப்பனவாகவே உள்ளன.

மன்னாரைச் சேர்ந்த ஜோர்ஜ் டெல்வின் குரூஸும், கிறிஸ்டோபர் ஜூட் முரளிதரனும் பிரதியாக்கம் செய்த இந்நாடகங்களை வேறுபட்ட பிரதேசங்களையும் வேறுபட்ட மதங்களையும் சேர்ந்த மாணவர்கள் ஒன்றுகூடி மேடையேற்றினர்.

மன்னார்க் கூத்து முறைகளோடு ஏலவே எவ்வகையிலும் பரிச்சயப்படாதவர்கள் அப்பிரதேசத்தைச்சேர்ந்தவர்களிடமிருந்து ஆட்டமுறைகளைக் கற்றுக்கொண்டு ஆடியசிறப்புப் பார்வையாளர்களால் பாராட்டப்பட்டது. பழக்கியவர்களினதும் பழகியவர்களினதும் ஆர்வமும் ஆற்றலும் துலாம்பரமாயின. இவற்றை ஆடியவர்கள் தொழில் முறைக்கும் மத்தியில் சிறுகால முயற்சியில் அதனைச் சாதித்தனர் என்பதையும் மனங்கொள்ள வேண்டும்.

நாட்டார் கூத்துக்கள் பொதுவாகச் சாதாரண மக்களிடையே செல்வாக்குப் பெற்ற ஐதீகக் கதைகளையே ஆதாரமாகக் கொண்டவை. அந்தவகையில், கீழைத்தேயப் பண்பாட்டு மரபில் முக்கிய இடம் வகிக்கும் இதிகாசங்களான இராமாயணத்திலும் மகாபாரதத்திலுமுள்ள சம்பவங்களும் கிளைக் கதைகளுமே அனேகமான கூத்துக்களுக்குப் பொருளாய் அமைந்துள்ளன. இத்தொகுதியில் இடம்பெறும் வாலிவதை, இராவணன் வதம், ஆகியவை இராமாயணம் சார்ந்தவை. மரபுவழிக்கூத்து வடிவில் புதிய விடயங்களை வெளியிட வேண்டும் என்ற விருப்பதின் விளைவானது 'புதுயுகம் படைப்போம்' என்ற கூத்து. அது சாதி, மத, இனப் பகைமைகளைப் புறங்கண்டு பூமித்தாயின் மடியில் மனிதர்கள் அமைதியோடும் மகிழ்வோடும் வாழவேண்டும் என்ற இளைஞர்களின் வேட்கையினைக் காட்டுவதாக உள்ளது.

சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேர்ந்திருக்கிறது. தமிழ்ச் சங்கத்தவர்களின் பாரம்பரிய பண்பாட்டுப் பிரக்ஞையினையும், முதுசொம்களைப் பேணி வருங்கால சந்ததியினருக்கு வழங்கித் தொடர்பினைக் காக்கும் ஆர்வத்தினையும், ஆற்றல்களை வளர்ப்பதிலும் வெளிக்காட்டுவதிலும் உள்ள உற்சாகத்தினையும் பாராட்டவேண்டும். மேலும் பெறுமதிமிக்க வலிய முயற்சிகள் பலவற்றில் அவர்கள் ஈடுபட வாழ்த்துகிறோம்.

சி. தில்லைநாதன்.
தமிழ்ப் பேராசிரியர்.

*பேராதனைப் பல்கலைக்கழகம்,*
*பேராதனை.*

## வாருங்கள் கலை வளர்ப்போம் ...

ஒரு சமுதாயத்தின் முதுகெலும்பு அதன் பாரம்பரிய கலைகள். அழிவுறும் கலைகளை வெளிக்கொணர்ந்து அதற்கு புதிய பரிமாணம் கொடுத்து வளர்க்கும் போதுதான் நாங்கள் சற்றேனும் பெருமை அடைகின்றோம். 'நாட்டுக்கூத்து' உருவிழந்து, பொலிவிழந்து வழக்கற்று போய்க்கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் தான் பேராதனைப்பல்கலைக்கழக தமிழ்ச்சங்க ஆதரவுடன் அதன் சிறப்பை இயன்றளவு எடுத்துரைத்த பெருமை எங்களிற்கு நிறையவே உண்டு. அடிமேல் அடிவைத்து மெல்ல எழுந்து விழுந்து, ஆடி ஓடி தலைநிமிர்ந்து நிற்கும் வரையில் நாங்கள் பட்ட வேதனைகள் சந்தித்த இடர்பாடுகள் எண்ணிலடங்கா. பழைய கதைகள் பழைய கலைவடிவங்கள் ஆனால் நிறைய புதிய களங்கள் இந்தப் பல்கலைக்கழக வாழ்க்கையில் நாட்டுக் கூத்தின் மூலம் நாங்கள் சந்தித்துக் கொண்டவை.

'வாலி'யில் ஆரம்பித்து இராவணன், கர்ணன், பாரதி, அபிமன்யு என நாம் களங்கண்ட மேடைகளில் சிறப்புற புகழப்பட்ட நாட்டுக்கூத்து வடிவங்கள் இன்று நூலுருவில் உலா வருவது தமிழ்ச்சங்கத்தின் இன்னொரு இலக்கிய ஆக்கப்பணி என்பது யாரும் மறுக்க முடியாததாகும்.

நாட்டுக்கூத்து பங்குபற்றிபவர்கள் பாராட்டப் பெறுவது அதன் சிறப்பிற்கு கிடைத்த பெருமை ஆனாலும் இதன் சிறப்பை மெருகூட்டிய பலநெஞ்சங்கள் திரைமறைவிற்கு பின்னால், இலைமறைகாய்களாக இதன் ஒவ்வொரு நகர்வுகளிலும் ஆழமாக தங்களது செயற்பாட்டினை வாரி வழங்கியுள்ளார்கள். அவர்களை இத்தருணத்தில் நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

எனவே இந்தக்கலைப்பயணம் தொடர வேண்டும், பழம் பெரும் கலைகளின் பெருமை தரணியெங்கும் பரணி பாடவேண்டும், என்ற நோக்கில் தமிழ்ச்சங்கத்தின் இப்புதிய முயற்சியை போற்றி விடைபெறுகிறேன்.

**சீ. யூட் முரளீதரன்**

*பொறியியற்பீடம்*
*(இறுதிவருடம்)*

## பத்திரிகை விமர்சனங்கள்

"தரமான படைப்பு என நான் வாய் கூசாமல் கூறுவேன் 'இராவணன் வதம்' எனும் நாட்டுக்கூத்தினை. பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் இந்நாட்டுக்கூத்தினையிட்டு பெருமைப்பட்டுக் கொள்ளலாம். வடமோடித்தன்மை வாய்ந்த, மன்னார் வகை நாட்டுக்கூத்து இது என்று நான் நினைக்கிறேன். சும்மா சொல்லக்கூடாது, நன்றாகத்தான் இருந்தது.

எல்லோர்க்கும் தெரிந்த இராமாயணக்கதைதான். கூத்தாக பார்க்கிறபோது இன்னொரு பரிமாணம் தெரிகிறது. இலங்கை வேந்தனின் வீரம் சக்தி பூர்வமாக கூத்தினால் வெளிப்படுகிறது. ஆட்டத்தின் தன்மையினால் இராவணனின் வீரத்தின் முன் இராமனின் வீரம் எடுபடவில்லை. ஆட்டத்தின் தன்மையினாலேயோ என்னவோ இராவணன், அனுமான், அங்கதன், கும்பகர்ணன், ஆகியோரது ஆட்டங்கள் வேகத்தைக் கொடுக்கின்றன. அரங்கம் முழுவதையும் சுற்றிச் சுழன்று ஆடியது இன்னும் என் கண்முன் நிற்கின்றது. நான் நினைக்கிறேன் அரங்கத்தன்மை முழுமைபெற்ற ஒரு முக்கிய நாட்டுக்கூத்து இது என்று."

**சரிநிகர் 1-15 செப்டம்பர் 1993**

"கர்ணன் நாட்டுக்கூத்து உயிர்த்துடிப்புடன் இயங்கியது கூத்து என்பதனால் ஆட்டம் அதன் பிரதான இயக்கம். அதனால் இங்கு உயிர்த்துடிப்பு சாத்தியமாகிறது. பார்த்த இவ்வளவு நேரமும் கண்ணிமைக்காமல் பார்த்த கூத்து இது. கர்ணனாக ஆடியவரது ஆட்டம் அபாரமானது. நடிப்பும் ஆட்டமும் கைகோர்த்து வருகிறது. என்ன உடம்பு? கடைசி வரையும் களைக்காமல் கால் சோராமல் ஆடுகிறாரே? மற்றவர்களும் குறைந்தவர்கள் அல்லர். வீமன், அர்ச்சுணன், குந்தி தர்மன் இவர்கள் ஆட்டமும் ரசிக்கும்படி இருந்தது."

**சரிநிகர் 08-21 டிசம்பர் 1994**

## பொருளடக்கம் . . .


| | |
|---|---|
| வாலி வதை | 01 |
| இராவணன் வதம் | 08 |
| கர்ணன் | 18 |
| புதுயுகம் படைப்போம் | 29 |
| அபிமன்யு | 40 |



கு. ஜோர்ஜ். டெல்வின் குருஸின்


# "வாலி வதை"


மேடையேற்றம் : பேராதனை E.O.E. பெரெய்ரா அரங்கு
1992 கொழும்பு, பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபம்
கண்டி இந்து கலாசார மண்டபம்
கலையரங்கம், ரூபாவாஹினி தொலைக்காட்சி

# 'வாலி வதை'

### காட்சி 1

**(இராமன் - இலக்குவன் சபைக்கு வரல்)**

**வரவுகவி :** நெஞ்சிலே சோர்வும் விட்டு மனதிலே துணிவும் கொண்டு
மனைவியைத் தேடி இங்கு கானகம் ஏகிட்டானே

**தீர்மானம்**

**ஆடற்தரு :** அன்னம் சீதையை அன்புடன் தேடியே
வண்ணமாகவே கிஷ்கிந்தை நோக்கியே
எண்ணமாகவே இராமனும் தம்பியும்
திண்ணமாகவே செல்கின்றார் பாருமே

தன்னன்னா தன தானென்ன தானன
தன்னன்னா தன தானென்ன தானன
தன்னன்னா தன தானன தானன
தன்னன்னா தன தானன்ன தானா

**தீர்மானம்**

**இராமன்:** என்னருமை மனைவி தன்னை
இழந்து நானும் வருந்தி இன்று
காடு மேடு ஆறு தாண்டி - வந்தேன்.

தன்னதானே தானேனானே
தன்னதானே தானேனானே
தன்னதானே தானே தானே ....... தானே .......

**இலக்குவன்:** அருமை அண்ணா பயமும் வேண்டாம்
கடாயுதனின் குறியைக் கொண்டு
தேடி இங்கு நாமும் காண்போம் - வாராய்
(தன்னனானே -2)

### காட்சி 2

**(சுக்கிரீவன் - அனுமன் சபைக்கு வரல்)**

**வரவுகவி :** இராமனின் வருகைகண்டு கலங்கிட்ட சுக்கிரீவன்
வாலியின் ஒற்றர் என்றே பயந்திட்டான் நடுங்கிட்டானே
புறப்பட்டான் அனுமனோடு பதட்டமும் மறைந்து போக
விபரமும் அறிய இங்கு கானகம் ஏகிட்டானே.

**தீர்மானம்**



**ஆடற்தரு :** தான தந்தன தானதந்தன தானதந்தன தானேனா
தான தந்தன தானதந்தன தானதந்தன தானேனா
தான தந்தன தானதந்தன தானதந்தன தானேனா
தான தந்தன தானதந்தன தானதந்தன தானேனா

**சுக்கிரீவன் :** கோட்டை கொத்தளம் மீதிலேறி கூசாமல் நான் குதிப்பேனே
நாட்டிலுள்ள அனைவரையும் அழிவுறாமல் காப்பேனே
வானும் மண்ணும் காடும் நம்மை மகிழ்ந்து இசை பாடுமே
நீரில் ஆடும் தாமரையாய் முகமும் மகிழ்ந்து ஆடுவேன்.
(தானதந்தன ....)

**தீர்மானம்**

**சுக்கிரீவன் :** எந்தனின் காட்டுக்குள்ளே வந்தநீர் யாரென்றறியோம்
சொந்தமோ பந்தமோ நீர் உரைப்பீரே கேட்பேன் நானே

**ராமன் :** அஞ்சாதே சுக்கிரீவா அடியேன் நான் ராமன்தானே
எந்தனின் மனையாள் தேடி இவ்விடம் ஓடி வந்தேன்.

**தீர்மானம்**

**சுக்கிரீவன் :** அழகதும் புயமதும் கொண்ட - எந்தன்
அண்ணலே ராமனே கேளாய் (2)
என்னருமை மனையாளை அண்ணலாம் வாலி
கவர்ந்தேதான் சென்றிட்டான் களவாக கேளாயோ
காரிருள் கானகம் மேவி இங்கு
நலிவுற்று வாழ்கின்றோம் வாடி - (2)
கள்வனாம் வாலியை வதைத்தாலே நீர் இன்று
கண்மணி சீதையை மீட்கின்றோம் அண்ணலே

தனனானே தனனானே தானே - தானே
தனனானே தனனானே தானே -தானே
தனனானே தனனானே தானே
தனனானே தனனானே தன்னனானே தன்னனானே
தனனானே தனனானே தன்னனானே தன்னனானே.

**இலக்குவன்:** கானகம் வாழ்கின்ற தோழா உந்தன்
கண்ணீரும் இனி ஏனோ வீணாய்
அண்ணலாம் ராமனின் இன்புரை கேட்டு
புல்லாகிப்போனாரே புதுவீறு கொண்டாரே
உரமதும் உடலதும் கொண்ட நீயும்
என்தோழன் ஆனாயே பாராய்
நீதியின் பால் நின்று நெறியேதும் தவறாமல்
அழிப்பேனே நான் நின்று அழைப்பாயே போரிற்கு
(தனனானே தனனானே ....)

**தீர்மானம்**

## காட்சி 3

### (வாலி - தாரை சபைக்கு வரல்)

வரவுகவி : கிஷ்கிந்தா கானகத்தில் நித்திய அரசன் வாலி
வானரக் கூட்டம் தன்னில் தானக வேந்தனாகி
பரந்திட்ட தோள்கள் தன்னில் கதையினை துணிந்து தாங்கி
புவியுமோர் நடுநடுங்க போர்வையுடன் வந்திட்டானே

ஆடற்தரு : தனத்த தானா தனதன தானினம்
தனத்த தானா தனதன தானினம்
தனத்த தானா தனதன தானினம் - தானினோம்

வாலி : கிஷ்கிந்தா காட்டின் தலைவனும் நான்தான்
வேந்தாதி வேந்தன் வாலியும் நான்தான்
மேலோர்கள் தேவரும் எனதடி பணிவார் - பாருங்கோ
(தனத்ததானா தனதன......)

தாரை : வெண்முல்லைக் கொடியாள் தேன்சிந்தும் மொழியாள்
கார்மேக குழலால் மான்போல விழியாள்
பூலோகம் புகழும் வாலியின் மனையாள் - நான்தானே
(தனத்த தானா ....)

வாலி : கதைதனை தாங்கியே மனைதனை தாண்டுவேன்
புயமதில் ஏற்றியே புவிதனை தாங்குவேன்
வீராதி வீரர் இயம்பிடும் வேந்தனை - பாருங்கோ
(தனத்த தானா...)

தீர்மானம்

## காட்சி 4

### (வாலி - சுக்கிரீவன் போர்)

இராமனின் துணையும் கண்டு மகிழ்ந்திட்ட சுக்கிரீவன்
அண்ணலாம் வாலிதேடி வேகமாய் வந்திட்டானே ....

சுக்கிரீவன் : என்னுடை மனைவியை நீயும்
கவர்ந்தாயோ - காமப்பேயாலும்
உடலது அழிந்து நீயும் சிதைவாயே அண்ணாவே கேள்
புயமது துடிக்குது கரமதும் தவிக்குது
உன்னை நான் கொன்றே மனைவியை மீட்பேன்
வீணான போரிற்கு வாலியே போகாதே
வீண்வம்பு பேசியே புவியிலே மாளாதே

தந்தனம் தனதன தனதன தனதானா - தானேதானா
தனதன தனதன தனன தனதானா .......

வாலியே காலியாய் போகவும் துணிந்ததேனோ
இப்போதே மண்ணில்



கிரீடமும் உனக்கு இப்போது தேவைதானோ -
வீணாசை கொள்ளாதே
உன்னுடை அரசதை ஒழித்திட வந்தோம்
மார்பதைக் கீறியே குருதியை குடிப்போம்
வந்திடு பணிந்திடு சரணாக என்னிடம்
வீணாக ஏனோ பயந்தோட போகிறாய்
(தந்தனம்...)

வாலி : பேச்சிலே வீரனென் தம்பி அறிவேனே - என்வீரமறிந்து
நீயும் மோதிட வந்தது விந்தை தானே - ஐயோ பாவம்
கிஷ்கிந்தா காட்டின் அரசனும் நான்தான்
யாரிதை மறுப்பார் உண்டெனில் வரட்டும்
சிரமதை கொய்தே வரமதும் கொடுப்பேன்
பகைவரைக் கொன்றே பரிகாரம் புரிவேன்.
(தந்தனம் தனதன ....)

தீர்மானம்

## காட்சி 5

### (முதற் போர்)

### (சுக்கிரீவன் இராமனைச் சந்தித்தல்)

வரவுகவி : வான்போலே பரந்த மார்பும் கதையினைச் சுமந்த தோளும்
வீரமும் துணிவும் யாவும் களத்தினில் இழந்த பின்பு
நெஞ்சிலே சோகம் தாங்க அவமானமும் மனத்தை தாங்க
இராமனைத் தேடி இங்கு சுக்கிரீவன் வந்திட்டானே

சுக்கிரீவன் : என்னருமை இராமரே வா
என்னை ஏனோ கைவிடுகின்றாய்
வாலி என்னை வதைத்திடவே
நீயும் ஏனோ பார்த்து நின்றாய்

இராமன் : மன்னிப்பாய் நீ சுக்கிரீவா
மாறாட்டமே கொண்டேன் நானும்
மாலை தன்னை அணிந்தே மீண்டும்
போர்க்களமே புகுந்திடுவாய்

தன்னதானே தானேனானே தன்னனானே தானேனானே
தன்னனானே தானேனானே தன்னதானே தானேனானே

## காட்சி 6

### (வாலியிடம் தாரை முறையிடல்)

தாரை : என்னினிய ஐயாவே கேள்
போரிடவும் துணிந்ததேனோ

கனவு ஒன்று நானும் கண்டேன்
நெஞ்சமது பிளந்தனதயா

கோசலையின் மைந்தன் ராமன்
அனுமனோடு சேர்ந்துவிட்டான்
போகாதே ஐயா போகாதே நீ
போரிடவோ போகாதே ....

வாலி : ரோஜாவினை ஒத்த ராமன்
மீளாதவும் நியாயம் ஏனோ
நீதியாளும் தேவன் அவன்
அறியாயோ தேவி அறியாயோ நீ
(தன்னனானே ..... தானேனானே ......)

**காட்சி 7**

**(வாலி - சுக்கிரீவன் இறுதிப் போர்)**

வரவுகவி : கழுத்தினில் மாலை தாங்கி விழிகளில் பொறிகள் ஏந்தி
நெறியது பிறழ்ந்த போதும் வெறியதில் பித்தம் கொண்டு
வழியெல்லாம் கால்கள் பார்த்து குதியதில் வாலி தேடி
கவியெல்லாம் கிளைகள் தாவ புயலாக புகுந்திட்டானே.

சுக்கிரீவன் : வாலியே நீயிங்கு வாடா போலியே உன்னுயிர் குடிப்பேன்
புவியிலே உனை உதைக்க இங்கு
எமனாக வந்தேன் பாராய்

வாலி : வந்தனன் வந்தனன் மீண்டும் உன் சிரமுடைப்பேன்
உன்னை மேலோர் உலகனுப்ப இங்கு
எமனாக வந்தேன் பாராய்

சுக்கிரீவன் : வாலியே நீ இங்கேவாடா வாகுடனே வந்தேன் நானே - 2
போலியே உன் உயிர் குடிப்பேன் பாரடா....

தந்தனம் தனத்ததானா தந்தனம் தனத்ததானா
தந்தனம் தனத்ததானா
தந்தனம் தனத்த தானா தானெனா .....

வந்தேனே நான் நன்றாய் பாரு தந்தேனே நான்
நல்ல பாடம் - (2)
போராதோ நீ தாங்காமலே ஓடடா .....
(தந்தனம் தனத்ததானா...)

**தீர்மானம்**

**(போர்)**

இராமா ...... என்றவாறு வாலி நிலத்தில் வீழ்கிறான்
ஐயா என்றபடி தாரை அழுகிறாள்.



பங்கேற்றோர் : செல்வன். கே. தங்கவேல்,
செல்வன். வி. சிவகுமார்,
செல்வன். பி. ஜே. கஸ்ரர்,
செல்வன். போல் பிருதிவிராஜ்,
செல்வன். ஜீ. டி. குரூஸ்,
செல்வி. கே. நந்தினி.

பிற்பாட்டு : செல்வி. கே. கமலினி,
செல்வி. பி. கலைவாணி,
செல்வி. எஸ். வரதா,
செல்வி. ஜீ. திருமகள்,
செல்வன். எஸ். அருட் பிரகாசம்,
செல்வன். என். சிவகுமார்,
செல்வன். எஸ். சுதாகர்

ஹார்மோனியம் : செல்வி. மரியராஜினி மரியாம்பிள்ளை.

பிரதியாக்கம்
நெறியாள்கை : செல்வன். ஜோர்ஜ் டெல்வின் குரூஸ்.

கு. ஜோர்ஜ். டெல்வீன் குருஸின்

# "இராவணன் வதம்"

மேடையேற்றம் : பேராதனை E.O.E. பெரெய்ரா அரங்கு
1993 பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபம்
கண்டி இந்து கலாசார மண்டபம்



# "இராவணன் வதம்"

## காட்சி 1

**வரவுகவி :** வாரணம் பொருத மார்பன் வரையினை எடுத்த தோளன்
தாரணி மௌலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்
நாரத முனிவர்க்கேற்ப நயம்பட உரைத்த நாவன்
வீரமாய் இலங்கை வேந்தன் வேகமாய் வருகின்றானே.

**ஆடற்தரு:** வருகின்றான் ராஜன் வருகின்றான் ராஜன் சபைதனில்
வருகின்றான் ராஜன்
கையினில் கதையுடன் கண்ரெண்டில் பொலிவுடன் (2)
வீரமகா ராஜரும் வியந்திடவே இங்கு
வருகின்றான் ராஜன் வருகின்றான் .....

**தீர்மானம்**

**இராவணன் :** வீராதி வீர சூரன் பாரதிரும் எந்தன் மைந்தன்
பாவையரின் பார்வை எங்கும் பத்துத்தலைமன்னனே

தனதனதத்தம் தனதானா தனதனதத்தம் தனதானா
தனதனதத்தம் தனதானா தானின தானா

**மண்டோதரி :** பொன்னிறத்தில் தேகம் உண்டு
கண்ணிரண்டில் நேசம் உண்டு
வெண்ணிலவின் கோலம் பூண்ட மன்னன் தேவி நானே
(தன....)

**இந்திரஜித் :** தாரணியில் வீரமைந்தன் இராவணனின் நேயமைந்தன்
ஓரணியில் வீரம் கொண்டு தேவரையும் வெல்வேன்
(தன ..)

**தீர்மானம்**

## காட்சி 2

**வரவுகவி :** சோகமே கடலாய் சூழ தேம்பியே அழுதுசாகும்
மன்மதன் வரைந்த கோலம் கலங்கியே வாடுதிங்கே
கண்ணெல்லாம் கணவன் கோலம்
கயவர்கள் சூழ்ந்த போதும்
கண்ணீரில் கலங்கும் தேவி சீதையைப் பாடும் இங்கே

**ஆடற்தரு :** கண்ணிரண்டில் கண்ணீரைத்தாங்கி
நெஞ்சமெல்லாம் மன்னனையே ஏந்தி
தன்னிலை மறந்திட்டாள் தயவின்றிக் கலங்கிட்டாள் (2)
என்ன செய்வாளோ ஐயோ

**தீர்மானம்**

**சீதை :** **மன்னவனே என்னவனே மண்ணில் உள்ளவனே**
**மண்ணில் எங்கே மண்ணில் உள்ளவனே**
**மண்ணில் எங்கே**

**தன்னனானே தானே னானே தான தன்னனானே**
**தானேதானே தான தன்னனனே தானே னானே**

**சீதை :** முன்போன்றதே சோலைப் பூவும்
கள்ளைப்போன்றதிங்கே வெள்ளைப்பாலும்
(தன்னதானே....)

**சீதை :** மன்னவனே மறந்ததேனோ சொல்லில் பிழைகண்டாயோ
சொல்லு கண்ணா சொல்லில் பிழைகண்டாயோ
சொல்லு கண்ணா
(தன்ன.......)

## காட்சி 3

வரவுகவி : சீதையை இழந்த ராமன் ஆருயிர் பிரிந்தகோலம்
பாவியாம் இலங்கை வேந்தன் சதியினில் உதித்த சோகம்
தேவியைக்காண நெஞ்சில் உறுதியும் அணிந்து கொண்டு
தம்பியின் துணையுடனே கானகம் வருகின்றாரே.

ஆடற்தரு : இராமன் எழில் ராமன் பெரு வீரதீர சூரன்
சீதையைத் தேடி வந்த மன்னன் வில்லுடன்
வருகின்றார் பாரும் இராமன்

**தீர்மானம்**

இராமன் : வானமும் பூமியும் சதிசெய்து எந்தனின் வாழ்வை
கொல்லாது கொல்லுதே என்னுயிரை எங்கு கண்பேன்

தனதன்னத் தனதன்னத் தானா
தனதன்னத் தனதனனத் தனதன்னத் தனதன்னத் தானா

இலக்குவன் : வானரத்துணை கொண்டு பாவியை அழிப்போமே கேளாய்
பாவையை மீட்கவே துணிந்தோமே
அண்ணலே வாராய்
(தன்ன ......)

இராமன் : வஞ்சியைக் காணாது நெஞ்சம் துஞ்சுதே பாரீர்
கண்களும் குளமாக ஐயோ என் வாழ்க்கைத் தான் எண்ணி
(தான.......)

இலக்குவன் : பார் போற்றும் மன்னனே துணிந்திடு வெல்வோமே இன்று
உன்னரும் மனையாளும் விரைந்திங்கு வருவாளே நம்பு
(தன்ன.....)



**(அனுமான் வருகை)**

**வரவுகவி :** அகிலமே பாதந்தன்னில் அடங்கிடும் கோலம் கொண்ட
வானுயர் மரங்களெல்லாம் பதம் அதில் நெருங்கிச்சாக
வானர மைந்தனவன் வானரத்தளபதியாய்
கானகம் ஏகிட்டானே ராமனின் முன்னே பாரும்

ஆடற்தரு : காடு கரம்பெல்லாம் பதமதில் நெருங்கிட
பெருவானரன் வந்தான் (2)
புவிதகதகதகவென திகுதிகுதிகுவென
அனுமானும் வந்தான்
உடலதில் உரம் ஏந்தி கரமதில்
கதை ஏந்தி அடிதடி என வந்தான் (2)
அவன் தகதகதகவென திகுதிகுதிகுவென
விரைந் தெழுந்தே வந்தான்

**தீர்மானம்**

**அனுமான் :** ஏனோ இந்தச் சோகக் கோலம் தேவா - இலங்கா
புரி நான் செல்ல விடைதருவாய் கவலை வீணே பாராய்

தன்னனானே தானே தான தன்னத்
தானேனானே தானேனானே தானேதானே தானா
தந்தன தனதன தந்தன தனதன
தந்தன தனதன தானனத்தானா

இலக்குவன் : வீணே விடிவு தொலைவில் இல்லை அண்ணா - அனுமான்
துணையும் கொண்டு அழிப்போம் - அவரை விடையும்
நீயே தருவாய் விடையும் நீயே தருவாய்
(தன்னனானே....)

இராமன் : சென்றிடுவாய் தீவில் தேடி நண்பா - நல்ல
ஆசி தந்தேன் நீயும் வெல்ல அவளை நீயும் காண்பாய்
(தன்னானே...)

## காட்சி 4

வரவுகவி : சஞ்சீவி செடியைப்போல வஞ்சமில்லா நங்கையாக
தஞ்சமாய் சீதையவள் நெஞ்செல்லாம் கோலமிட்ட
வஞ்சகன் தம்பி மகள் திரிசடை கூட இங்கு
இராமனின் தோகை சீதை சோகமாய் வருகின்றாளே

தன்னன்னா தனதானன்னத் தானன்ன தானன்னத் தானானா
தன்னன்னா தனதானன்னத் தானன்னதானன்னத்தானானா

திரிசடை: வஞ்சமில்லாத பொன்னெழில் தேவியே
சோகம் ஏனோ கூறாய்
கார்மேகன் வந்து போர் வென்று
மீட்பானே சொர்ப்பன சேதிகேளாய்
(தன்ன.....)

திரிசடை : மாபெரும் கோட்டை நாணியே சாய்ந்தது
வீரயானை சோர்ந்தது
இலங்காதேவி வெண்ணாடை போர்த்தாளே
வெண்புறா பறந்ததுவே

(தன்ன.....)

வந்த துன்பமும் வாடியே நின்றிட ஒடிடுமா சொல்வாய்
மன்னவன் ராமன் கன்னமே வைத்துனை
தன்னகம் சேர்ப்பானே

சீதை : அன்னையே எந்தன் ஆருயிர் நங்கையே
நீயின்றி நான் ஏது
உன் சொல்லில் எந்தன் சுமைகளும்
குறையுதே வாழ்க நீ பல்லாண்டு

(தன்ன.......)

**(அனுமன் சீதையிடம் வரல்)**

வரவுகவி : கலங்கிடும் ராமன்தேவி வசித்திடும் மூலைதேடி
வாயுவின் மைந்தனிங்கு பாய்ந்தோடி வருகின்றானே

அனுமன் : சென்றிடுவேனே லங்காபுரி சென்றிடுவேனே
வென்றிடுவேனே அரக்கர்களை வென்றிடுவேனே
கையிலே பலத்துடன் நெஞ்சிலே உரத்துடன் (2)
பகைதன்னைப் போக்கியே பணியினை முடிப்பேனே
சென்றிடுவேனே....
வென்றிடுவேனே
சோலைகள் மூலைகள் சாலைகள் தேடியே (2)
வந்திடுவேன் சபதம் வென்றிடுவேனே

(சென்றிடு......)

இல்லையேல் சீதையும் இங்கேயும் இல்லையேல் (2)
மீட்டுவேன் இலங்கையை விலங்கின் மேல் வீழ்த்தியே

(சென்றிடு......)

ஆடற்தரு : தாதய்யத்தய் தய்யத் தாம் தீனத்தோம் (2)
தத்துமீத் தாந்தின தத்துமித் ததிங் கினத்தோம் (2)

**(சீதையிடம் கணையாழி பெற்று திரும்புதல்)**

அனுமன் : சென்றிடுவேனே அண்ணல் தேடி சென்றிடுவேனே
சொல்லிடுவேனே அன்னை சேதிசொல்லிடுவேனே (2)
கண்டனன் கற்பினின் கனியை என் கண்களால் (2)
கணையாழி தனைக்காட்டி அண்ணலை மகிழ்விப்பேன்

(சென்றிடு.....)

**காட்சி 5**

வரவுகவி : அனுமானின் சேனம் கண்டு எரிந்ததே லங்காபுரி
இராவணன் நெஞ்சம் கூட கனலாகி எரிந்ததிங்கே



**தேவர்கள் கோபம் கண்டு சோர்ந்திங்கு நடுநடுங்க**
**விரைந்திட்டான் அரசசபை சோதரர் மைந்தர் சூழ**
தானன்னத் தானன்னத் தானா (2)
தானன்னத் தானன்னத் தானேனா (2)
தன்னத் தனனானே தனனானே தனனனானே தானா

**தீர்மானம்**

இராவணன் : குரங்கதின் சேட்டையால் மண்ணிலே - கோலப்
பூக்களும் கருகியே காய்ந்ததே
சோகமாய் உள்ளமும் புலம்புதே (2)
நல்ல அறிவுரை கேட்கவே சொல்லுவீர் இங்கே

(தான.....)

இந்திரஜித் : அஞ்சிட வேண்டாமே தந்தையே - உன்னைக்
கெஞ்சிட வைப்பேனே அற்பரை
வென்றிட உள்வீரம் மிகுதியே (2)
என்வீரம் போதுமே உன்மைந்தன் அல்லவே

(தான......)

கும்பகர்ணன் : பெண்பாவம் பொல்லாது அண்ணலே
பெண்வேண்டாம் விட்டிடு சீதையை
என் எண்ணப்படியல்ல மன்னனே
உன் எண்ணம் எதுவோ சொல் அதுவே என் எண்ணமே.

(தான .....)

இராவணன் : சங்கொலி முழங்கட்டும் எங்கனும் - பாரில்
பொங்கிடும் படையெல்லாம் தங்கிடும்
சிந்திட செந்துளி மண்ணிலே - 2
சிந்திப்போம் சந்திப்போம் போரிலே அற்பரை

(தான.....)

**(அங்கதன் தூது)**

வரவுகவி : அனுமானின் சேதி கேட்டு அதிர்ந்திட்ட அண்ணலவன்
அழிந்திடத் துணிந்தபோதும் அகிலத்தின் நெறி உணர்ந்து
வாலியின் மைந்தன் தன்னை நேயமாய் இலங்கை நோக்கி
வேகமாய் அனுப்பிட்டானே தூதாகப் பாரும் இங்கே.

ஆடற்குழு : தன்னானே தானினத் தானின் தன்னானே தானினத்தானின
தன்னானே தானினத் தானின் தன்னானே தானினத்தானின
தந்தன தனதன தந்தன தனதன
தனத்ததானா தனத்ததானா தனத்ததானா தனத்ததானா

அங்கதன் : அன்பான இராவணனே கேள் வீணாகத் துணிந்ததும் ஏனோ
பார்போற்றும் ராமனின்முன்னே நீராகப் போரிடல் தகுமோ
படைபலம் நடைவரவும் தடைபகை விடைபெறும்

நொடிகொலை உடன் விழும் திடீரென இடி விழும்
கொஞ்சம் சிந்தி பின்னா் சந்தி
விந்தை நிந்தை வேண்டியே ஒடிட

**இராவணன் :** என்னாசை அங்கதனே கேள்
பொன்னான உன் தந்தையும் எங்கே (2)
மாய்த்தோரின் படையினில் சேர்ந்து
ஏய்ந்தேனோ மாய்கிறாய் நீயும்
உன்தையும் நான்தான் எந்தையும் ஆவாய்
பொன்முடி கொண்டு என்னுடன் அமர்வாய்
அரசை ஏற்பாய் ஆசை தீர்ப்பாய்
ஆசை கொண்டே காசினி ஆள்வாய்
(தன்.....)

**அங்கதன் :** வேங்கையை வென்றவனுக்கு
நாய்கள் தரும் பரிசதும் ஏனோ
சோகமாய்த் தேம்பிடும் தேவி சேமமாய்ச் சேர்ந்திடப்பணியும்
முடிதனை நொருக்கியே குடிதனை அழிப்போம்
தலைகளை நொருக்கியே கரைதனின் தளிர்ப்போம்
(உயிர்தனைக் குடிப்போம்)
வீரமுழக்கம் இட்டேஇங்கு
தடைகளைத் தகர்த்து படைகளை அழிப்போம்.

**இராவணன் :** வீராதி வீரனின் முன்னே தூதே நீ கோளாய்
வேரோடு சரிப்பான் இராவணன் சீராக செப்பிடுதம்பி
சதைதனை உண்டே சமித்திடு வேனே
கடமை உரைத்தேன் படையழிப்பேன்
குருதி குளித்தே சபதமே முடிப்பேன்
(தன் ....)

## காட்சி 6

### (போர்)

**வரவுகவி :** வில்லுடன் இலக்குவனும் விரைந்திங்கு ஒடிவர
வானர மைந்தனும் கூடியே பாய்ந்துவர
இராவணன் மைந்தனவன் வில்லினைத்தாங்கிவர
கும்பனும் கூட இங்கு குதித் தோடிவருகின்றானே

**தீர்மானம்**

**ஆடற்தரு :** தன்னனானே தன்ன னானே தன்னானே
தன்னனானே தன்ன னானே தன்னானே
தன்னனானே தன்னனானே தன்னானே

**இந்திரஜீத் :** ராமனவன் தம்பியாரே கேள் - பாரினிலே
வீரன் மகன் கோழையோ நீ சொல்
வான் படைகள் உன் தன் பக்கம்
தேர்ப்படைமுன் நிற்குமோசொல் (2)
துள்ளிவரும் சிங்கமாக
கொள்ளி வைக்க வந்தேன் பார்

**இலக்குவன் :** வில்லெதுவும் தேவையில்லையே - என்முன்னே
கல்லைக்கண்ட நாயாய்ப் போவாயே
நெஞ்சமுண்டு துணிவுண்டு
கொஞ்சம்கொஞ்சமாகக் கொல்ல (2)
எந்திரமாய் உன்னிலேறி பந்தயத்தை வெல்வேன் பாரு
(தான.....)

**கும்பகர்ணன் :** சிங்கம் வந்துசீறும் போதிலே மண்மேலே
அங்கம் எல்லாம் துள்ளி ஒடுமே
தங்கக் கதை தோளில் உண்டு பங்குபோடத்துண்டுதுண்டாய்
ஏங்கிஏங்கிச் சாகுமுன்னம் வங்கமேறி வீடு சேரு

**அனுமன் :** அரக்கா் தலை பாதம் விழுமே - மயக்கம் போட்டு
மாளும் காலம் ஒடி வருமே
தயக்கம் விட்டேன் வாடா நீயும்
பயந்து ஒட எண்ணமோ சொல்
முயன்றுபாரு வெற்றி கொள்ள வியக்கவைத்தே
கொல்வேன் பாரு (2)
(தன்....)

**தீர்மானம்**

## காட்சி 7

**வரவுகவி :** மனைவியை இழந்த கோலம் மறமெல்லாம் தீயாய்மாற
கணைகளின் துணையுடனே கோசலை மைந்தன் ராமன்
மலைபோன்ற தோள்கள் தன்னில்
கதைகளைத் தாங்கி இங்கு
இராவண மாமன்னரும் வீரமாய் வந்திட்டாரே

**தீர்மானம்**

**இராமன் :** இராவணா இங்கு ஏனடா வந்தாயோ
வீணடா இங்கு சாவதே மேலடா
தூசடா உன்னை வீசியே கொல்வேனே
பாரிலே உந்தன் பிணம் விழும் பாரடா

தன்னன்னா தனதானன்னத் தானன்னத் தன்னன்னா தான
தன்னன்னா தனதானன்னத் தானன்னத் தன்னன்னா தான

**இராவணன் :** இராமனே இங்கு வாலாட்ட எண்ணமோ
வேங்கையை வெல்ல வில்லுடன் வந்தாயோ
கொல்லுவேன் உன்னைக் கதையாலே மோதியே
பார் புகழ் மன்னன் பேர் தன்னை வெல்லுமவன்
(தன்னன......)

**தீர்மானம்**

**(இராவணன் தோற்று இலங்காபுரி செல்லல்)**

வரவுகவி : வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்ததோளும்
தாரணி மொதலி பத்தும் தகவென எரியும் ராஜன்
நேரணி இணையே இல்லா ஆழ்கடல் சூழ்ந்த தீவில்
வீரமாய் இலங்கை வேந்தன் வெறுங்கையோடு
இலங்கை புக்கான்

**காட்சி 8**

வரவுகவி : கதையிழந்து பொலிவிழந்து தலையதில் முடியிழந்து
கலங்கினான் இலங்கை வேந்தன்
கடன்பட்டார் நெஞ்சம் போல
இன்று போய் நாளை வா என்றவன்
கொல் வார்த்தை கேட்டு
துணிந்திட்டான் அணிந்திட்டானே புறப்பட்டான் முடிவு நோக்கி

**தீர்மானம்**

இராவணன் : எனை மெத்த வதை செய்து கொடுமைகள்
புரிந்தாயோ - வாடா
உன் தன்சிரந்தனை உடைத்தே நான் சபதமே
முடிப்பேனே - வாடா

தன்னத்தன்னதன்னத் தனதன்னத் தனத்தானா

இராமன்: உனைக் கொல்லப்பட வேண்டாம் தனயேனாய்
வந்தேனே பாராய்
நல்ல வரந்தந்தே பதந்தன்னில் கதைதன்னை
முடிப்பேனே வாராய்

**தீர்மானம்**

(தன ...)

**(போர் முடிவில் இராவணன் இறத்தல்)**

மன்னா

**தீர்மானம்**

மண்டோரி : மன்னவா எந்தன் உயிரினும் உயிரே
உயர் வீடு சென்றாயோ ராவணா - மன்னவா
அன்று சீதை அழகினில் மயங்கியே (2)
மன்னன் ராமனின் மனைவியைக் கவர்ந்தாயே இன்று
உந்தன் நிலையிது வானது எனையுள்
பங்கயர் திருப்பாதம் சேர்ப்பாயே

மன்னவா .... மன்னவா ..... மன்னவா......



| | | |
|---|---|---|
| பங்குபற்றியோர் | : | செல்வன்.அருளானந்தம் பெனடிக்ற் இராஜேந்திரன் |
| | | செல்வன். சிவபாலன் செந்தூரன் |
| | | செல்வன். சந்திரலிங்கம் கண்ணன் |
| | | செல்வன். வல்லிபுரம் சிவகுமார் |
| | | செல்வன். பரமானந்தன் பிரதீபன் |
| | | செல்வன். கிறிஸ்டோபர் யூட்முரளிதரன் |
| | | அருட்சகோதரர் கருணாகரன் |
| | | செல்வி. அனுஷா நல்லராஜா |
| | | செல்வி. சாந்தினி ஆறுமுகம் |
| | | செல்வி. கிரிஷாந்தி இராமையா |
| பிற்பாட்டு | : | செல்வன். ஜோய்ஸ் டெல்வின் குரூஸ் |
| | | செல்வன். கனேசலிங்கம் மணிவண்ணன் |
| | | செல்வன். பெனடிக்ற் ஜோன் கஸ்ரர் |
| | | செல்வன். சுந்தரம்பிள்ளை கபிரியேற்பிள்ளை |
| | | செல்வன். குமரகுரு சிவநேசன் |
| | | செல்வன். சிவசுப்பிரமணியம் சபேசன் |
| | | செல்வி. கமலினி கந்தப்பு |
| | | செல்வி. வரதா சடாச்சரலிங்கம் |
| | | செல்வி. தேவமனோகரி சிவகடாற்ச சர்மா |
| | | செல்வி. கலைவாணி பாலசிங்கம் |
| வயலின் | : | செல்வன். முருகவேள் மகாசேனன் |
| தபேலா | : | செல்வன். சமரசிங்கம் ஜெயசிங்கம் |
| ஆர்மோனியம் | : | செல்வி. மரியராஜினி மரியாம்பிள்ளை |
| ஒப்பனை | : | செல்வன். இராசையா இளங்குமரன் |
| | | செல்வன். பாலசுப்பிரமணியம் மணிவண்ணன் |
| | | செல்வன். கந்தசாமி ஐயர் பாலகிருஸ்ண ஐயர் |
| | | செல்வி. இளஞ்செல்வி கையாலர் |
| | | செல்வன் . போல் பிரிதிவிராஜ் |
| ஒளியமைப்பு | : | செல்வன். சோமலிங்கம் பரந்தாமன் |
| | | செல்வன். சிவகுருநாதன் பராபரன் |
| | | செல்வன். கந்தசாமி இளங்குமரன் |
| அரங்க அமைப்பு | : | செல்வன். கனகராஜா ரவிசங்கர் |
| பிரதியாக்கம் | : | செல்வன். கு. ஜோய்ஸ் டெல்வின் குரூஸ் |
| நெறியாள்கை | : | செல்வன். கு. ஜோய்ஸ் டெல்வின் குரூஸ் |
| | | செல்வன். பெனடிக்ற் ஜோன் கஸ்ரர் |

சி. ஜே. முரளிதரனின்

# "கர்ணன்"

மேடையேற்றம் : பேராதனை பெரெய்ரா அரங்கு
1994 பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபம்
கண்டி திரித்துவக் கல்லூரி மண்டபம்



# "கர்ணன்"

## காட்சி 1

**(கர்ணன் துரியோதனனுடன் சபைக்கு வரல்)**

வரவுகவி : மின்னிடும் மணிகள் தாங்கி
கண்ணையே பறிக்கும் ஒளியோன்
தன்னையே வள்ளலாக்கி தரணிக்கு அளித்த கர்ணன்
நூற்றுவ தலைவன் அவன் நட்புடன் சேர்ந்துவர
சூரிய புதல்வன் அவன் சபைதனில் வருகின்றாரே....

ஆடற்தரு : இப்புவியில் வெடிகொடி தீர்ந்திட
தகதகதகவென சலங்கை குலுங்கிட
தகிர்தோம் திகிர்தோம் தளாங்கு தோமென
கர்ணன் அவன் கரந்தனில் கதையுடன்
மன்னன் துரியோதனன் கூடவே
பகலவன் புதல்வனும் பாங்குடன் வாறானே ....
தகிர்தோம் திகிர்தோம் தளாங்கு தோம்.

**தீர்மானம்**

தன்னன்ன தானின தனை தானினா - தனதானதந்தின
தானன்ன தானன்ன தனை தானினா - தனதானதான
தன்ன தானின தனன தானின (2)
தனதன்ன தனதன்ன தனதன்ன தானினா
தானன்ன தானன்னா தனதன்ன தானினா
தன தன்ன தானா

**கர்ணன்:** நூற்றுவ வீரர்கள் வீறுகொண்டெழுந்திட
இந்த அஸ்தினாபுரத்தினில்
ஆறுகள் கூடியே அழகு செய்திட
என்றும் அமைவாய் கேட்பாய்
ஏறுகள் அரிகள் அணிஅணியென (2)
வீறு கொண்டவரை கூறுகள் செய்திட
கௌரவசேனையின் படைபலம் கண்டபின்
பாண்டவர் வாழ்வதோ?

**துரியோதனன்** : நண்பன் கர்ணனே கனிவாய் மொழிகேட்பாய்
இந்த மாநிலம் மீதிலே
உன்னை மீறியோர் பாரி இங்குண்டோ
இதை உலகே அறியும்
துள்ளி எழும்படை வெள்ளமெனவரும் (2)

கரி எத்தனை பரி எத்தனை எண்ணிடல் ஆகுமோ
பாண்டவர் படைகளை பந்தாட நீயிப்போ
பாய்ந்து நீ செல்வாயே ....

(தன்னன்ன தானின தனை தானினா தன ....)

**தீர்மானம்**

**துரியோதனன்** : என்னருமை நண்பனே கேள்
துன்பம் ஒன்று வந்ததிங்கே - உன்னருமை நண்பன் நானும்
உயிர்துடித்தே வாடுகின்றேன்
பஞ்சபாண்டவர்கள் தானும்
பாதிநாடு தானும் கேட்டார்
வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சி
யுத்தம் கோரித் தூது விட்டார்.

**கர்ணன்** : கௌரவமன்னனே கேட்பாய்
கலங்கிடாதே கர்ணன் வெல்வான்
நண்பன் துயர் நானும் கொண்டே
இடுக்கண் இங்கு களைவேன் காண்பாய்
என்னுடைய பெருமை எல்லாம்
கௌரவர்க்கே சொந்தம் கண்டாய்
பார்தனில் நீ வாழ்வாய் என்றும்
பதறாமல் நீ அரசு செய்வாய்.

**தீர்மானம்**

**(நடையுடன் வெளியேறல்)**

**காட்சி 2**

**(இந்திரன் கர்ணனின் கவச குண்டலங்களை கவரல்)**

**வரவுகவி** : பாண்டவர் உயிர்கள் தனை பரிவுடன் காக்க எண்ணி
விண்ணவர் கண்ணன் அவன் மேவிய செய்தி கேட்டு
வாரியே வழங்கும் கர்ணன் வாசலை நோக்கி நாடி
ஏழையின் சின்னம் பூண்ட இந்திரன் வருகின்றானே.

தன்ன தானா தானேதானா
தானே தந்தினனா
தன தான தந்தின தானேதானா
தானே தானினா ....

**இந்திரன்** : மன்னன் மன்னா கர்ணன் மன்னா
வந்தேன் பாருமய்யா - இந்த ஏழைபடும்
பாட்டைக் கொஞ்சம் பார்த்தால் ஆகாதோ (2)
உண்ட உதரம் ஒட்டிப்போனது
வறுமை கண்டாயோ - புவிமீதில் இந்த



வறியோன் வாழ வழிநீ சமைப்பாயோ (2)
(தன்னதானா தானே தானா...)

ஓடிவந்தேன் தேடி வந்தேன்
வாரி வழங்குவாய் - உந்தன் கவச குண்டலம்
எனக்கு வேண்டும் கனிவாய் தந்திடுவாய்
(தன்னதானா தானே தானா....)

**தீர்மானம்**

**கர்ணன்**: என்ன பெரியவரே கவச குண்டலமா கேட்டீர் (2)
பொன்னும் மணிகள் தாறேன் - பூமியில் வாழ
வறுமைகள் ஓட என்றும் வாழ்வீரே

**இந்திரன்** : இரப்பவர்க்கில்லையென்று வழங்கிடும் வள்ளலேகேள் (2)
இறக்கும் முன் ஆசை கொண்டேன் - கேட்டதைஈந்தால்
நான் மகிழ்வேனே என்றும் - சொல்கேட்பாயே

தந்தனோம் தானே தானா தந்தனனோம் தானேதானா (2)
தானான தானே தானா
தனதன்ன தான - தன
தனதன்ன தான - தன தானேனா

**கர்ணன்** : தருகின்றேன் தருமியே நான்
தயங்காமல் பெற்றிடுவாய் (2)
தருமங்கள் என்னை காக்கும் - வேறெதும் வேண்டாம்
இந்த பூமியில் இனிதே - என்றும் வாழ்வீரே
(தந்தனனோம் தானேதானா...)

**அசரீரி** : கர்ணனே ஒன்று கேட்பாய்
வந்தவன் வறியோன் அல்ல
கண்ணனின் ஏவலாலே இந்திரன் இங்கு வந்தான்
கவச குண்டலமும் இருந்தால்
எதிரியும் கலங்கி வீழ்வான்
கருத்துடன் என் சொல் கேட்டு
கயவனை துரத்தி விடுவாய்
(தந்தனோம் தானே தானா ....)

**காட்சி 3**

**(பாண்டவர்கள் வருகை)**

**வரவுகவி** : மலைக்குகையின் சிங்கமென மதயானை முழக்கமென
நிலைப்புலத்தின் தீயெனவே நீள்கடலின் ஆழமென
உடற்பலத்தால் ஒளிமிகுந்தோன் வீமனும் கூடவர
தருமனும் விஜயனுடன் கண்ணனும் தோன்றினானே.

**ஆடற்தரு** : தந்தனத்தோம் தனதானா - தானினத்தோம் தனதானா
தந்தனோம் தனதன தானின தனதன
தந்தனனோம் தனதனனா....

தருமன் : மூவுலகை ஈரடியால் முறையாக அளந்தவனே
பாற்கடலில் பள்ளி கொண்டு பரிவுடனே காப்பவனே
பாவியாம் கௌரவர் படைதனை அழித்திட
சீரிய வழி செப்புவாய்.

வீமன் : ஆதிசேடன் தாங்கிடுமே பூமியை நீ பார்த்திடுவாய்
ஆழ்கடலும் வான் புவியும் செங்கதிரும் தண்மதியும்
யாவுமே கௌரவர் சேட்டையால் அஞ்சியே
வாழ்வதை நீ அறியாய்
(தந்தனத்தோம் தனதானா......)

அர்ச்சுனன் : காண்டீபம் கரந்தனில் இருக்கும்வரை கலங்கிடாதே
கர்ணன் அவன் உயிர்தனையே
கணநொடியில் நான் பறிப்பேன்
பாஞ்சாலி மானத்தை பரிகாசம் செய்திட்ட
பாவிகள் உயிர்பறிப்பேன்

கண்ணன் : கூடவரும் எதிரிகளின் குலமுழுதும் நீர் அழிப்பீர்
வேதனைகள் செய்திட்ட வெறும் வீரர் உயிர்குடிப்பீர்
அண்ணனின் அறவழி அழிந்திடா காத்திடும்
திண்ணமாய் வென்றிடுவீர்
(தந்தனந்தோம் தனதானா....)

தீர்மானம்

கண்ணன் : நெஞ்சத்தினில் கொஞ்சமும் நீர்
அஞ்சிடவே வேண்டாம் கேளும்
வஞ்சகனாம் சகுனி செயல் வெஞ்சமரில் ஆகாதய்யா
அஞ்சிடவே ஓடிவந்த காலம் இனி மாறிடுமே
வெஞ்சமர் தான் தான்புரிய வீறுடனே சென்றிடுவோம்..

தீர்மானம்

தன்னன்ன தானானா தானாதன்ன
தானினோம் தானானா
தன்னன்ன தானின்ன தானன்ன தானன்ன
தானின்ன தானின்ன தனதன்ன தானா

கண்ணன் : சென்றிடுவோம் வாரீர் விரைந்தொன்றாய்
கௌரவரை நாடி
சென்றிடுவோம் வெகு சீற்றமுடன் அங்கு
நூற்றுவ படை தனை நேர்த்தியுடன் காண

வீமன் : கண்ணன் உரைப்படியே நாமிங்கு
திண்ணமுடன் செல்லுவோம்
மண்ணும் கலங்கிடவே ஏனிந்த விண்ணும் அலறிடவே
கண்ணின் இமையென வாழ்ந்திட்ட சோதர் நாம்



பகைதனை போக்கியே நலம்தனை பேணவே
(தன்னன்ன தானானா தானா தன்ன ....)

அர்ச்சுனன் : கண்ணன் துணை கொண்டு பாவியாம்
கர்ணன் உயிர் குடிப்பேன் - பஞ்சமகளாராம்
பாஞ்சாலி சொன்ன சொல் காத்திடுவேன்
என்ன அகந்தையால் என் மனையாளையே
சொன்ன அவ்வார்த்தைக்கு பின்னதை நாடியே

தருமன் : வாழ்வதும் ஓர்நாளே மண்ணில் வீழ்வதும் ஓர்நாளே
இப்படைதான் தோற்கின் புவிதனில் எப்படைதான் வெல்லும்
அக்கினி குஞ்செ‌ன ஆவலுடன் சென்று (2)
வெந்து தணிந்திட வீறுடன் தான் செல்வோம்
(தன்னன்ன தானானா தனதன்ன .....)

## காட்சி 4

(பெண் கர்ணனை நாடிவரல்)

வரவுகவி : ஆற்றிலே மிதந்த கர்ணன் அரசனாய் உயர்ந்த வேளை
நூற்றிலே வீரனாய் நெறிபட வாழ்ந்த காலம்
ஏற்றமே காண மாதர் மகனென பொய்யுரைத்து
வள்ளலை வாரிசாக்க மதிகெட்டு தோன்றினாரே

தன்னதானே தன்னதானே தானா - தனை
தன்னதானே தன்னதானே தானா (2)
தன்னதானே தன்னதானே தன்னதானே தன்னதானே
தன்னதானே தன்னதானே தன்னதானே தானினானா

பெண் : என்னுடைய புத்திரனேபாராய் - இன்று
உனை ஈன்ற அன்னையும் நான் கேளாய் (2)
ஆற்றிலே மிதக்கவிட்டு தேடியே நான் ஓடிவந்தேன்
பாசமாக ஏற்று என்னை நேசமாக வைத்துக்காப்பாய்

கர்ணன் : பெண்ணே நீ கலங்கிடாமல் வாராய் - அன்று
ஆற்றில் எனை விடுத்த கதை கூறாய் (2)
என்னுடைய அன்னை பூண்ட ஆடைதன்னை நீயும் பாராய்
பொய்தனை நீ கூறிடாமல் மெய்தனை நீஎன்றும் காப்பாய்
(தன்னதானே தன்னதானே தானா ....)

பெண் : பொன்னரும் மணிகள் கொண்ட ஆடை - அருமை
மகனே நான் மண்ணாகவே மாட்டேன் (2)

சுட்டெரிக்கும் தீயும் எனை தீண்டிடாத சேதி பார்ப்பாய்
சேலைதனை போர்த்தி என்னை தாயெனவே போற்றிடுவாய்
(தன்னதானே தன்னதானே தானா ....)

தீர்மானம்.

## காட்சி 5

### (குந்தி கர்ணனை நாடிவரல்)

வரவுகவி : கதிரவன் அருளால் கனிந்து கங்கையில் விடுத்தமைந்தன்
கர்ணனே என்று மாயக்கண்ணனும் கூறக்கேட்டு
அனலிடை மெழுகுபோன்று துடித்திட்ட குந்தி தானும்
ஆதவன் புதல்வன்நாடி அலறியே ஓடினாளே.

தனனம் தனதன தனனம் தனதன
தனனம் தனதன தானா
தனனம் தனதன தனனம் தனதன (2)
தனனம் தனதன தானினா ஆ...... ஆ...... ஆ......

குந்தி : மகனே நினதடி மெய்யாய் பணிகின்றேன்
பெற்ற தாயெனைப்பாராய் - அன்று
ஆற்றினில் விடுத்த பாவி நான் (2)
இன்று பொறுத்தருள் வேண்டினேன்

(தனனம் தனதன தனனம் தனதன...)

**தீர்மானம்**

கர்ணன் : அம்மா குந்தியே அறிந்தேன் தாயென
என்ன கொடுமை நீ பாராய் - சேலை
அணிந்தும் நீ சோலையாய் நின்றாய் (2)
வேண்டும் வரம் நீ கேள் தருகின்றேன்

(தனனம் தனதன ....)

குந்தி : வள்ளலே மகனாரே பாண்டவர் மூத்தோனே
தம்பிமார் தலைமை நீ ஏற்பாயே - கொடுமை
செய்திட்ட கௌரவ படைகளை (2)
அடிமை கொள்ள நீ வருவாயே

கர்ணன் : செஞ்சோற்றுக்கடனம்மா மீறுவதிகழ்வம்மா
நண்பனைக் காத்திடல் நன்றே - பெருமை
சேர்த்திட்டான் கௌரவஅதிபதி (2)
சிறுமை நான் செய்திடல் தகுமோ சொல்

(தனனம் தனதன தனனம் தனதன ....)

குந்தி : நல்லவன் மகனே நீ வாழ்க நீ வளமுடன்
தம்பிமார் உயிர்தனைக் காப்பாயே

நாளை அர்ச்சுனன் உன்னிடம் சமர்செய்தால் (2)
நாகாயுதம் நீ குறைப்பாயே

கர்ணன் : ஆகட்டும் அன்னையே அருள்கின்றேன் வரம்தனை
அஞ்சிடா நீயும் செல்வாயே - போரில்
நானுமே மடிகின்ற போதினில் (2)
உன் மடி மகனென சாற்றுவாய்

(தன்னம் தனதன ....)



## காட்சி 6

### (போர் அணிவகுப்பு)

வரவுகவி : கௌரவ படைகள் தானும் கடலென ஆர்ப்பரிக்க
பாண்டவர் படையும் இங்கு பலத்துடன் எதிர்த்துவர
சூரிய புதல்வன் அவன் சுழன்றிங்கு ஓடிவர
தருமனும் தம்பிமாரும் சடுதியில் குதித்திட்டரே

தந்தனோம் தன தன தன தன தனதானா
தன்னானே தானா (2)
தந்தனனோம் தன தன தன தன தானா
தந்தனோம் தன தன தன தன தானா
தந்தனோம் தன தன தன தன தானா .....

### (தருமன் - கர்ணன் போர்)

தருமன் : கர்ணனே நீ இங்கு வாடா
மரணம் தானே உனக்கு காண்பாய் (2)
வஞ்சக உன் உயிர்தனைப் போக்கவே
நெஞ்சகத்தில் நேர்மை பாராய்
நீதிவெல்லும் இன்றே காண்பாய் (2)
ஓடிடும் குருதியாறு வெள்ளமாய்

கர்ணன் : தேவலோக புத்திரனே, சென்றிடுவாய்
விரைவாய் நீயும் (2)
கந்தை துணி போல நீயும் ஆகவோ
பந்தயத்தில் தோற்று அன்று
பாஞ்சாலியை நீ இழந்தாய் (2)
பொங்கி எழும் என் சினத்தால் மாளவோ .....

தந்தனம் தனத்த தானா
தந்தனோம் தனத்த தானா (2)
தந்தனோம் தனத்ததானா தானினா

**தீர்மானம்.**

### (வீமன் - கர்ணன் போர்)

தந்தனம் தன தன தன தன தன தானா -
தன்னானே தானா (2)
தந்தனம் தன தன தன தன தானா
தந்தனோம் தன தன தனதன்ன தானா
தந்தனோம் தன தன தன தன தானா
தந்தனோம் தன தன தனதன்ன தானா

வீமன் : தேரோட்டி மகனே நீ செய்தது சரியா சொல்
வீண்வாதம் வேண்டாம்
பொங்கிடும் புஜபலம் இங்கே காண்பாய் நீ வீணாக சாவாய்
அரக்குமாளிகை தனையே எரித்து

அஸ்தியாக்கிட முயன்றதும் முறையோ
நொருக்குவேன் உந்தன் சிரம்தனை இன்றே
பருகுவேன் உந்தன் குருதியை நன்றாய்.

**கர்ணன் :** சாப்பாட்டு வீமனே சண்டைக்கு ஏன் வந்தாய் சொல்
உயிர் ஆசை கொண்டா
கூப்பாடு போடாதே கூக்குரல் இடுவாய் நீ மாமிசவீமா
பூக்காடு மெத்தையா போர்க்களம் கண்டாய்
பெருங்காட்டு பூதத்தை மணந்தும் நீ சென்றாய்
கதையுடன் மோதி உடைபடபோறாய்
சதை கொண்ட மலையே விரைவாக வாராய்
(தந்தனோம் தன தன ....)

**தீர்மானம்**

## காட்சி 7

### (அர்ச்சுனன் ஆசிபெறல்)

**அர்ச்சுனன் :** என்னருமை அண்ணனே நான்
சென்றுவர விடைதான் தாராய்
கர்ணனுடன் யுத்தம் செய்து
கொடுமையகலச் செய்வேன் நன்றே
அரக்குமாளிகை தனிலே அழித்திடவே
நினைத்தான் அன்று
இரக்கமே இனியும் காட்டேன்
இப்பொழுதே செல்வேன் பாராய்.

**தருமன் :** உள்ளம் நீ குலைந்திடாமல்
வென்று வர விடைநான் ஈந்தேன்
தருமமே வெல்லும் என்றும்
கர்மமே செய்வாய் நன்றே
கௌரவரில் கர்ணன் அவன்
திண்ணிய வீரன் பாராய்
வெற்றியுடன் மீண்டும் வர
ஆசி தந்தேன் அர்ச்சுனனே .......

## காட்சி 8

### (அர்ச்சுனன் - கர்ணன் யுத்தம்)

**அர்ச்சுனன் :** அண்டமும் எனதடி பணிந்திட
திண்டாடி படைகளும் ஓடிட
காண்டீபம் சங்கொலி எழுப்பிட
காற்றாக கரைந்துமே போவாய்
வஞ்சக கூட்டத்தின் நெஞ்சமே பிளப்பேன்
பஞ்சமா தலைவியின் சபதமே முடிப்பேன்
கொடுமையகல துயரம் ஓட
அடிமை விலங்கு அவனியில் பொடிபடவே



**கர்ணன் :** பரந்தாமன் துணையுடன் வந்த
பார்த்தீபன் பதரே நீ கேளாய்
வாய் சொல்லில் வீரம் வேண்டாம்
செயல் கொண்டு காண்போம் போரில்
கதையுடன் வந்த வீமனும் எங்கே
அறம்பல புரிந்த தருமனும் எங்கே
மோதிப்பார்த்து முடிவு கொள்வோம்
சோதிவானவன் மகனை நீ அறியாய்
(தன்னானே தானின தானா ....)

**தீர்மானம்**

### (கர்ணன் அம்புபட்டு துடிக்கும் போது)

கதலியின் கனியில் ஊசி
கனிந்திட சேருமாப் போல்
கணைதனை ஏற்று மார்பில் - கலங்கிட சுற்றும் பார்த்து
இரப்பவர்க்கில்லையெனா வழங்கிடும் வள்ளல் கர்ணன்
செய்நன்றி கொன்றிடாமல்
மெய்பட நிலத்தில் வீழ்ந்தான்

### (கண்ணன் வருகை)

**ஆடற்தரு :** தனதன்ன தனதன்ன தனதன்ன தனதன்ன தானா
தனதன்ன தனதன்ன தனதன்ன தன்தன்ன தானா

**கண்ணன் :** இரவியின் மைந்தனே தரணியில் தளர்ந்தவன் நானே
இன்று வறுமைப்பெருந்துயர் தீர்ந்திட
உனை நாடி வந்தேன்

எத்தலங்களிலும் ஈகையால் எதிர்வில்லா வீரா
உந்தன் மெய்நலம் முழுவதும்
குருதியும் ஆறாகிப் போச்சே
(தனதன்ன தனதன்ன ....)

தருமமே தான் செய்து கருமமே காத்திட்ட கர்ணா
உன்புண்ணியம் முழுவதும்
தானமாய் தந்திட்டால் மகிழ்வேன்
(தனதன்ன தனதன்ன......)

### (கர்ணன் அறங்களை இரத்தத்துடன் வழங்கியபின்)

உடலது துடித்திட்டாலும்
உயிர்தனைப் போக்கிடாமல்
காத்திட்ட அறங்களையே
தானமாய் தாரைவார்த்தான்
செஞ்சோற்று கடனே இங்கு
பெரிதென மதித்த கர்ணன்
மெய்யது அடங்கிடவே
தெய்வமாய் வீடுசேர்ந்தான்
(தனதன்ன தனதன்ன ......)

பங்குபற்றியோர் : அருட்சகோதரர் கருணாகரன்
எஸ். சபேசன்
ப. பிரதீபன்
சி. ஜூட் முரளீதரன்
வ. சிவகுமார்
தா. சிறிராமநாதன்
சி. எம். மொறாயஸ்
யோ. பிரதாபன் .
ந. கமலினி
எம். சத்திய நாயகி

பிற்பாட்டு குு. சிவநேசன்
ச. வரதா
கெ. முரளீதரன்
சு. கீதாஞ்சலி
ச. ராஜேஸ்வரன்
மு. ஜெயசுந்தரி
ந. கிருஷ்ணவேணி

தபேலா : ச. ஜெயசிங்கம்

பொங்கோ : என். எஸ். டேவிட்

ட்றம்ஸ் : என். சி. தயாபரன்

ஆர்மோனியம் : என். சி. மரியராஜினி

ஒப்பனை : சி. சிவனாந்தன்
சி. செந்தூரன்
தி. பாலகுமார்
கே. இளஞ்செல்வி
கே. பாலகிருஷ்ண ஐயர்

ஒளியமைப்பு : ஆர். நிலாவளன்
சி. பரணன்
எஸ். பிரபாகரன்

அரங்கமைப்பு : க. கௌரிதரன்
ந. யோகராஜா

பிரதியாக்கம் : சி. ஜூட் முரளீதரன்

நெறியாள்கை உதவி : ப. பிரதீபன்
வ. சிவகுமார்

நெறியாள்கை : சி. ஜூட் முரளீதரன்



சி. ஜே. முரளீதரனின்

# "புதுயுகம் படைப்போம்"

மேடையேற்றம்
1995 : பேராதனை E.O.E பெரெய்ரா அரங்கு

# "புதுயுகம் படைப்போம்"

**காட்சி 1-A**

**(குடிமக்கள் (இளைஞர்கள்) இருவர் சபைக்கு வரல்)**

வரவுகவி : மானிடர் வாழ்வுதன்னை தரணியில் மீட்க எண்ணி
தருக்குறு பகைவர்தன்னை தலையுடன் சாய்த்து மீள
உரமென உயர்ந்த தோள்கள் பறமென வீரநெஞ்சம்
கரங்களில் தினவுகொண்டு குதித்திட்டார் இளைஞர் இங்கு

ஆடற்தரு : தனத்த தானா தனதன தனதன
தனத்த தானா தனதன தனதன
தனத்த தானா தனதன தனதன தானினா

**தீர்மானம்**

இளைஞன் 1 : ஆறுகள் அருவிகள் அழகுற பாய்ந்திட
வீறுகொள் உழவர் வேண்டியதீந்திட
பாருக்குள் இன்று பஞ்சமே இன்றியே - வாழ்வோமே
(தனத்த தான...)

இளைஞன் 2 : சாதிகள் பேதங்கள் எங்களிற்கில்லையே
சமத்துவம் இங்கே சமரசம் வீசியே
வாழ்ந்திடும் சமூகம் வீழ்ந்திடா என்றுமே காப்போமே

தனத்ததானா தனதன தனதன
தனத்ததானா தனதன தனதன
தனத்த தானா தனதன தனதன தானினா

இளைஞன் 1 : மாதர்கள் தம்மையே மடமைகள் செய்திடா
வீணர்கள் அற்ற வீரம் சேர் சமூகத்தை
மேதினி தனிலே மேம்பட என்றுமே - செய்குவோம்
(தனத்த தானா...)

இளைஞன் 2 : எங்களின் அன்னையின் எழில்மிகு வாழ்வை
பங்கமே இன்றி பாரினில் காத்திட
பொங்கிடும் இளைஞர் நாம் பூமியில் குதித்திட்டோம் பாருமே

தனத்த தானா தனதன தனதன
தனத்த தானா தனதன தனதன
தனத்த தானா தனதன தனதன தானினா

**தீர்மானம்**

**காட்சி 1- B**

**(சமுதாய அன்னை சபைக்கு வரல்)**

வரவுகவி : சுழன்றிடும் உலகுதன்னை சுடர்ஒளிவீசி காக்கும்
இளகிடும் மனதுகொண்ட எழில்மிகு பூமி அன்னை



அவனியில் மாந்தர் வாழ்வின் அல்லலை போக்க எண்ணி
அன்பர்கள் தன்னைநாடி மேதினி தோன்றினாளே

ஆடற்தரு : தாந்தன்னம் தனதன தாந்தன்னம் தனதன
தாந்தன்னம் தன தனதானா - தன
தாந்தன்னம் தனதன தாந்தன்னம் தனதன
தாந்தன்னம் தனதன தானா ஆ....... ஆ........

அன்னை : எமது நாட்டினில் பகைமையொன்றில்லை
பாழும் மடமையும் இல்லை - இங்கே
புதியஎண்ணங்கள் புதுமை வண்ணங்கள்
புரட்சி கீதங்கள் காண்பாய்

இளைஞன் 1 : அன்னையே உன்மக்கள் அன்பில் நல் இலக்கணம்
அன்புடன் வாழ்வதைக் காண்பாய் - இங்கு
எந்தைகள் ஒன்றாக சிந்துகள் பாடிட
மந்தைகள் எம்மை நீ காப்பாய்

இளைஞன் 2 : தென்றலில் நெற்கதிர் தெம்மாங்கு பாடிட
பஞ்சம், பசி, பிணி காப்பாய் - அந்த
ஏர் கொண்ட தோளினை சீர்செய்து பார்த்திட
நீர் கொண்ட பசுமைக் தாராய்
(தாந்தன்னம் தனதன ......)

அன்னை : சென்றிடும் என்மக்கள் செயலில் துணிவுடன்
பெண்மையின் தன்மையை காக்க - இந்த
போதனை துணைக்கொண்டு சாதனை செய்திட
ஆசிகள் அளித்திட்டேன் ஏற்பாய்.

இளைஞன் 1 : வேற்றுமை அகன்றுமே ஏற்றங்கள் தோன்றிட
ஒற்றுமை காத்திட செல்வோம் - அன்று
கல்தோன்றும் முன்னமே தோன்றிட்ட எம்மினம்
பல் ஆண்டு வாழ்ந்திட செய்வோம்.
(தாந்தன்னம் தனதன தாந்தன்னம் தன .....)

**(வெளியேறல்)**

**காட்சி 2**

**(சாதி, மத, இன, அரக்கர்கள் வருகை)**

வரவுகவி : இதந்தரும் இன்பம் கண்டு எழில்நயம் கொண்டு வாழ்ந்த
மக்களின் வாழ்வுதன்னை இனங்கண்டு பொசுக்கிடவே
வஞ்சக கொடுமை கொண்ட இன, மத, சாதி என்னும்
நெஞ்சக நீதியற்ற அரக்கரும் குதித்திட்டாரே

தக தக தக தக
திகு திகு திகு திகு
தளாங்கு தத்துமித்தோம்
தெந்தின தின தினனா தினா தின
தெந்தின தின தின தெந்தினனா -

**தீர்மானம்**

சாதி : சாதிகள் தோன்றிடவே எந்நாளும்
வீதிகள் சமைத்தே உடைத்திடுவேன்
இத்தரை மீதினிலே மனிதர்கள்
அத்தனை பேரையும் ஒழித்திடுவேன்
(தெந்தின .....)

மதம் : ஒன்றல்ல கடவுள் என்றே மூடர்
மூளையை பிளந்து சொல்லிடுவேன்
மதவெறி கொண்டு மக்கள் என்றுமே
மரணத்தை அணைத்திட செய்திடுவேன்
(தெந்தின .......)

இனம் : பேதங்கள் சொல்லிடவே இம்மண்ணில்
வேதங்கள் நானும் ஓதிடுவேன்
கலகங்கள் மூண்டிடவே இவ்வுலகையே
கலங்கிட என்றுமே செய்திடுவேன்
(தெந்தின தி .....)
(தனந்தனம் தனதனனா தன்னானே..)

**தீர்மானம்**

சாதி : இங்கிருக்கும் மாந்தர் தம்மை
இஷ்டப்படி ஆட்டிடவே
சாதி, மத, பேதம் பூண்ட
அரக்கர் நாமும் வந்தோம் காண்பாய்
மனித பண்பை தோண்டி என்றும்
விலங்கு தனத்தை ஏற்றிடவே
கலக்கமின்றி நானும் இப்போ
கடுகியேதான் சொல்வேன் காண்பாய்

இனம் : அண்ணல் வழி நாமும் சென்று
அவல நிலை தொடர செய்வோம்
ஒற்றுமையை காக்கும் அன்னை
சமூகத்தை உடைத்தெறிவோம்
கைகளினில் விலங்கு பூட்டி
கண்ணீர் வர செய்த பின்னர்
இத்தரையில் எம்மை மக்கள்
வணங்கும்படி செய்வோம் வாரீர்.

**தீர்மானம்**

(தெந்தின தின தினனா...)

**காட்சி 3**

**(ஆணும்பெண்ணும் வரல்)**

வரவுகவி : உலகதின் தன்மைகாட்டி உவமையாய் வாழ்ந்து என்றும்
தென்றலாய் வாழ்ந்த வாழ்வின் பெருமையை போற்றி இன்று



**ஊரதும் வாழ்த்திடவே பாரதும் போற்றிடவே**
**அண்ணலும் அவளுமாக மகிழ்கின்றார் வாழ்க்கை தன்னில்**

ஆடற்தரு : தனனம் தனதன தனனம் தனதன
தனனம் தனதன தானா
தனனம் தனதன தனனம் தனதன (2)
தனனம் தனதன தானினா ஆ.... ஆ..... ஆ.......

ஆண் : மீட்டும் வீணைநீ மேவிடும் விரலும் நான்
பாட்டுப் பாடிட வாநீ - காட்டில்
எறித்திடும் நிலவாய் ஆகாமல் (2)
வீட்டில் என்றும் நாம் மலராவோம்

பெண் : இனிய தமிழும் நீ ஒளிரும் கவிதை நீ
அன்னையின் அருளுடன் வாழ்வோம் - மாதர்
தம்மையே மடமைகள் செய்யாமல் (2)
மாநிலம் மகிழ்ந்திட பாடுவோம்
(தனனம் தனதன .......)

ஆண் : எனது துணையே நீ இனிய நாயகி
என்றும் அன்புடன் வாழ்வோம் - சாதி
மதமென்னும் பேதமை அழித்திங்கு (2)
மானிடம் பயனுற வாழ்வோமே

பெண் : எனது நாயகா புரட்சி மலரே வா
புதியதோர் உலகையே படைப்போம்
ஆணுக்கு பெண் இங்கு சரிநிகர் ஆக்கியே (2)
அவனியை மாண்புற செய்குவோம்
(தனனம் தனதன .....)

**(அரக்கர்கள் வரல்)**

சாதி : ஏது சொன்னாய் எனது அடிமை நீயும்
உன்னிலை அறியாயோ
என்ன அறிவிருந்தும் எப்பொருள்தான் கற்றும்
பெண்ணறிவென்பது தெரியாதோ இன்னும் புரியாதோ
சொல்லத்தெரியாதோ

இனம் : இன்றே கேட்பாய் உனது நிலையின் தன்மை
இன்னவென்றறியாயோ
இனங்களில் தலையினம் இவள் என்ன புதுயினம்
இன்றுடன் இவளை நீ விடுவாயோ
உண்மை அறிவாயோ
என்னை புரிவாயோ

தன்ன தானா தனனம் தான தானா
தானின தானானா

தன்னன்ன தானின தனதன்ன தானின
தனதன்ன தனதன்ன தானான
தனதானானா தனன தானானா

**(அரக்கர்கள் கலைந்துக்கொண்டு செல்லல்)**

## காட்சி 4

**தீர்மானம்**

ஆண் : என்னருமை அன்னையரே
எங்கள் நிலை பார்த்திடுவாய்
அன்று நாங்கள் உந்தன் மக்கள் என்றவாறே தானிருந்தோம்
வல்லவராம் அரக்கர் தானும்
கொல்ல இன்று ஓடி வந்தார்
எம்மை நீரும் காக்க என்றும்
புல்லர்களை கொன்றிடுவாய்

பெண் : சாதி மத பேதம் கொண்ட
சாக்கடையின் புத்திரர்கள் - எம்மை இன்று
அடிமை கொள்ள
இக்கணமே ஓடி வந்தார்
இந்தநிலை தொடர்ந்து சென்றால்
எங்கள் நிலை எங்கு போகும்
தரணிதனில் நாங்கள் வாழ
தாள் பணிந்து வந்தோம் காண்பாய்

இனம் : துடிநடைபோடும் மடமாதே
பிடிவாதம் நீயும் செய்யலாமோ
அரக்கர்கள் எமை எதிர்த்திட்டாலோ
இரக்கமே என்றும் காட்டோம்

மதம் : மதங்களை கொண்டே கூறுபோட்டு
மக்களை நானும் வதைத்திடுவேன்
என்னுடைய ஆட்சி கண்டு
பெண்ணே நீயும் அடங்கு

தனதனதத்தம் தனதானா தனதனதத்தம் தனதானா
தனதனதத்தம் தனதானா தானினனானா

சாதி : சாதிகொண்டு உன்மக்களை
பாதியாக்கி வீழ்த்திடுவேன்
நீதி நீயும் கொண்டு இங்கு
பேதை என்ன செய்வாய்
(தனதனதத்தம் தனதானா .......)

**தீர்மானம்**



ஆடற்தரு : தனதன்ன தனதன்ன தனதன்ன தனதன்ன தானா
தனதன்ன தனதன்ன தனதன்ன தனதன்ன தானா

அன்னை : பால்கொண்ட உதரங்கள்
வேல் கொண்டு வேகுதே பாரும் - எந்தன்
சூல் கொண்ட மக்களை
நீர் கொன்று அழிப்பதா கூறும்.

ஆண் : இனமின்றி மதமன்றி ஒற்றுமை காத்திட்டோம் - அன்று
இன்று பிணந்தின்னும் கழுகுகள்
கழுவேற்ற துடிப்பதை பாராய
(தனதன்ன தனதன்ன...)

அன்னை : குருதியும் ஆறாக பெருகிடும் மாயையைப் பாராய்
கண்கள் உருகியே விழிநீராய்
மடை கொண்டு போவதை காண்பாய்
(தனதன்ன ........)

**தீர்மானம்**

சாதி : இப்படியா நீ பகிடி சொன்னாய் - உந்தன்
செப்படிகள் மீதமுண்டோ இன்றும்
கைப்பிடிக்குள் சிக்கி கொண்டாய்
எப்படித்தான் மீண்டிடுவாய்
பொற்புறவே வீரம் கூறும்
பேதை நீயும் கேட்டிடுவாய்
(தன்னதானே .....)

இனம் : மெத்தவும் கெறுவிதமே கொண்டாய் - எங்கள்
புத்தியையா நீ பிதற்றிக் கொண்டாய்
அத்தனையும் நீ இழந்து
பித்தனைப்போல் மாறிவிட்டாய்
கைதியாக்கி உன்னை நாங்கள்
காலமெல்லாம் பூட்டிடுவோம்.

தன்னதானே தன்னதானே தானா - தனன
தன்னதானே தன்னதானே தானா - தனன (2)
தன்னதானே தன்னதானே
தன்னனானே தன்னனானே
தன்னதானே தன்னதானே
தன்னனானே தன்னினானா

## காட்சி 5

**(பாரதியார் மேடைக்கு வரல்)**

வரவுகவி : நிமிர்ந்த நல்நடையுடனே நேர்மிக பார்வை கொண்ட
நிலத்திலே யார்க்கும் இங்கு அஞ்சிடா நெறியும் பூண்ட

புதியதோர் உலகு செய்ய பூமிதாய் ஈன்றமைந்தன்
பாரதி நாமம் பூண்டு பாங்குடன் வருகின்றாரே

ஆடற்தரு : தன்னன்னா தன தானின தானின
தானன்ன தானானா
தன்னன்னா தன தானின தானின
தானன்ன தானானா

பாரதி : பொங்கிடும் எந்தன் சோகமே பார்த்திடாய்
சீர் கெட்ட உலகமே - அன்னையே
நீயும் அடிமையாய் ஆவதோ
எண்ணியே பார்த்திடாய்
விளக்கினை நற்பழமென்று எண்ணியே
வீழ்ந்திட்ட விட்டில்களாய்
அரக்கரின் மாயை பிடியினை உடைக்கவே
இரக்கமே காட்டீரோ
(தன்னன்ன தன தானின.....)

இளைஞன் 1 : நல்லதோர் வீணை செய்திட்டாய் பாரதி
நாமினி என்ன செய்வோம்
நலம்கெட என்றும் புழுதியில் எறிந்திட்டார்
பலம் கொண்ட அரக்கர் தானும்

இளைஞன் 2 : எந்தையும் தாயும் ஒன்றாக கூடியே
சிந்தை மகிழ்ந்திருந்தார்
சதியினை ஊட்டி சமத்துவம் போக்கவே
விதி கொண்டு வந்தனரோ
(தன்னன்னா தன தானின......)

தீர்மானம்.

இளைஞர் 2 : ஏற்றம் கொண்ட எங்கள் வாழ்வு
நாற்றம் கண்டு வீழ்ந்ததையா
வேசம் போட்ட அரக்கராலே
மோசமாகி போனோம் காண்பாய்
இந்தநிலை தொடருமானால்
இழிநிலையில் வாழ்வோம் காண்பாய்
அன்னை விலங்கொடிக்க
ஆசி நீயும் அருள்க இன்றே

பாரதி : அச்சம் நீர் அகற்றி செல்வீர்
எச்சமாகி போவார் அரக்கர்
சிந்தனை நீர் செய்வீர் அன்றேல்
செத்துப்போதல் அதுவே நன்று
கண்டங்கள் சிதறிட்டாலும்
கடலதுவும் பொங்கிட்டாலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லை காண்பாய்

தீர்மானம்



பாரதி : சென்றிடுவோமே அரக்கர்களை வென்றிடுவோமே (2)
சென்றிடுவோம் அன்னை - விலங்கினை உடைத்திட (2)
நம்மை பிடித்திட்ட பேய்களை ஓட்டிட

ஆடற்தரு : தன்னன்னதானா தான தன்ன தானின தானா (2)
தன்னன்ன தானன்ன தானன்ன தானின (2)
தன்னன்ன தானின தானன்ன தானா

இளைஞன் 1 : உச்சியில் வானம் இக்கணமே உடைந்திட்டபோதும்
இச்சகத்துள்ளோர் எமையே எதிர்த்திட்டபோதும்
சாதிகள் பேதங்கள் மதங்களை தகர்த்திட
வீறுடன் சென்று நாம் கூறுகள் செய்குவோம்.

இளைஞன் 2 : எங்களின் வாழ்வு இதை தனிச் சங்கினில் ஊது
பொங்கிடும் ஏறு உயர்நடை பூமியில்போடு
பயமென்னும் பேய்தனை அடித்திங்கு நாமுமே
பொய்கொண்ட அரக்கரின் மெய்தனை வதைத்திட
(தன்னன்ன தானா தானதன்ன....)

இளைஞன் 1 : மதினைக்கொண்டு மாயை இந்த விதியினை வெல்வோம்
அடிமைகள் அற்ற புதியதோர் அகிலமே படைப்போம்
துச்சகமாய் எண்ணியே தூறுகள் செய்திட்ட
கல்நெஞ்ச கயவரை பூமியில் விரட்டிட

பாரதி : வையகம் காக்கும் அன்னை பராசக்தியே தாயே
வல்லமை தாராய் வீழும் இந்த மாநிலம் வாழ
உன்னரும் மக்களின் ஏக்கத்தின் குரல் கேட்டு (2)
தன்னிலை மேம்பட நின்துணை ஈந்திடாய்
(தன்னன்ன தான...)

(வெளியேறல்)

காட்சி 6

தீர்மானம்

தன்ன தானே தன்னதானே - தன்னானே
தன்ன தானே தன்னதானே
தன்னதானே தன்னதானே தன்னதானே தன்னதானே (2)

இளைஞன் 1 : சாதி வெறி கொண்டு மண்ணிலே - என்றுமே
பாதி பலி தானும் பறித்த
வீறு கொண்டு உன்னை இன்று
கூறுபோட்டு தானும் கொல்ல
ஏறுபோல வந்தேன் வாராய்
நீறு போல போவாய் இன்றே

சாதி : துள்ளி ஓடும் பள்ளிச்சிறுவா - இங்கேவா
கிள்ளி தலை அள்ளித்தருவேன்
தினவெடுக்கும் தோளின் மேலே
மலையுடைக்கும் கதையும் பாராய்
அங்கமெல்லாம் மங்கிப்போக
பங்கு போட்டே கொல்வேன் உன்னை
(தன்னதானே தன்னதானா.)

**இளைஞன் 2 :** எமை மெத்த வதைசெய்தே
மதம் கொண்டே உடைத்திட்டாய் வாடா - உன்னை
கணை தைத்த உடல்போலே வினை தைத்த விதி
போலே - கொல்வேன்

**இனம் :** எனையொத்த தனிவீரன் உளரோ இப்புவிமேலே - கேளாய்
எந்தன் பனையொத்த - கரத்தாலே
அணைபாயும் குருதிதான் பாராய்

தனதன்ன தனதன்ன தனதன்ன தனதன்ன தானா (2)

**இளைஞன் 1 :** அடடா நீ கொடும் பாவி கொலை பல செய்திட்டாய்
வாடா - உந்தன் குடல்தனை உருவியே
நிலைதனை மாற்றிடசெய்வேன்

**மதம் :** மதிகெட்ட மனிதா நீ கதிகெட்டுப் போனாயோ போடா
உன்னை சினம் கொண்டு வதைத்திட
பலம் கொண்டு வந்திட்டேன் வாடா
(தனதன்ன தனதன்ன......)

**தீர்மானம்**

**(போர்)**

தன்னானே தானேனானே தானா - தனன தான (2)
தந்தன தனதன தந்தன தனதன
தந்தன தனதன தானின தானா

**பாரதி :** அன்னையின் அவலநிலை காத்தீர் - அரக்கர் சாக
புண்ணிய பூமி தன்னை மீட்டீர் (2)
தத்துமி தகவென தாளங்கள் முழங்கிட
சமத்துவ உலகினில் சகலரும் மகிழ்ந்திட

**இளைஞன் 1 :** இன்று தணிந்ததெங்கள் தாகம் - அடிமைநிலை
கொன்று பணிந்தோம் அன்னை பாதம்
இன்னல்கள் தீர்த்திங்கு மானிடம் மகிழ்ந்திட
மானிட சாதியில் இன்பங்கள் சேர்ந்தோம்.

**இளைஞன் 2 :** எந்தையர் வாழ்ந்த எங்கள் நாட்டை - மகிழ்வுடனே
சிந்தையில் கொண்டு என்றும் வாழ்வோம்
அடல் சேர் மறவர் கரம் அணிஅணிதிரண்டிங்கு
விறல் சேர் வீரர் நாம் வீறுடன் எழுவோம்.
(தன்னானே தானே...)

**பெண் :** சாதிகள் இரண்டன்றி வேறில்லை - மதங்கள் எல்லாம்
பேதமை பூண்டிடாமல் காப்போம்
ஆணுடன் பெண்ணிங்கு சரிநிகர் ஆகிட
அன்னையின் அருளுடன் அவனியை காப்போம்.

**ஆண் :** எங்களின் பகைவர் அழிந்தார் இன்றே - தாயினைப் பழித்தால்
தரணியில் தாங்குமோ நீ கூறு (2)
தனியொரு மனிதனிற்குணவில்லை என்றால்
தரணியை அழித்துப் புதுயுகம் படைப்போம்.
(தன்னானே தான .......)



பங்குபற்றியோர் : செல்வன். சிவசுப்பிரமணியம் சபேசன்
செல்வன். பாலசிங்கம் சாய்ஸ்கந்தன்
அருட் சகோதரர் கருணாகரன்
செல்வன். கிறிஸ்ரியன் மரியதாஸன் மொறாயஸ்
செல்வி. சாந்தி சின்னையா
செல்வன். அட்ரியான் எட்வேட் நிக்ஸன் சொய்சா
செல்வன். மகாதேவன் சுபேந்திரன்
செல்வன். சரவணமுத்து கிருபால்
செல்வி. கிரிஜாதேவி குணசிங்கம்

பிற்பாட்டு செல்வன். பரமானந்தன் பிரதீபன்
செல்வன். குமரகுரு சிவநேசன்
செல்வன். அன்ரனி கொன்ஸ்ரன்ரைன்
செல்வன். சிவப்பிரகாசம் ஜெயக்குமார்
செல்வி. மஞ்சுளா வைத்திலிங்கம்
செல்வி. விஜயரேகா தில்லையம்பலம்
செல்வி. பாமினி திருநாவுகரசு
செல்வி. சுஜாந்தி ராமகிருஷ்ணன்
செல்வி. ஜெயரூபி ராஜரட்ணம்.

ஆர்மோனியம : செல்வி. மரியராஜினி மரியாம்பிள்ளை

தபேலா : செல்வன். சிவபாலன் பகீரதன்

ஒளியமைப்பு : செல்வன். சின்னதம்பி பிரபாகரன்
செல்வன். தாமோதரம்பிள்ளை சிறிராமநாதன்

ஒப்பனை : செல்வன். சிவபாலன் செந்தூரன்
செல்வன். தியாகராசா பாலகுமார்
செல்வி. வரதா சடாச்சரலிங்கம்
செல்வன். வல்லிபுரம் சிவகுமார்
செல்வன். வேலுப்பிள்ளை கஜேந்திரன்
செல்வன். சூசை அன்ரனிதாசன்

அரங்க அமைப்பு : செல்வன். நடராசா யோகராஜா
செல்வன். கந்தசாமி கௌரிவரன்

பிரதியாக்கம் : செல்வன். கிறிஸ்தோகுலெம்பேட் யூட் முரளீதரன்

நெறியாள்கை : செல்வன். கிறிஸ்தோகு லெம்பேட் யூட் முரளீதரன்
செல்வன். பரமானந்தன் பிரதீபன்

## சி. ஜே. முரளிதரனின்

# "அபிமன்யு"

மேடையேற்றம் 1996 : பேராதனை E.O.E. பெரெய்ரா அரங்கு
கண்டி இந்து கலாசார மண்டபம்
பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம்
திருமலை நகரக் கலாசார மண்டபம்.



# "அபிமன்யு"

## காட்சி 1

**(அபிமன்யு - கடோத்கஜன் - தர்மன்)**

**வரவுகவி :**
அச்சமே அகற்றி என்றும் அடங்கிடா வீரம் கொண்ட
அனலென அபிமன்யுவும் இடிகொண்ட மின்னலாக
வீங்கிய தோளின் மீது தாங்கிய கதையும் மின்ன
வீமன் தர்மனுடன் அபிமன்யு தோன்றினானே.

பகை கொண்ட கூட்டம் கிலிகொண்டு ஓடிட
கதையும் வில்லும் கரந்தன்னில் தாங்கிட
தக தக தகவென சலங்கை குலுங்கிட
தகிர்தோம் திகிர்தோம் தளாங்கு தோமென
விஜயன் மகன் வில்லுடன் வெளிவர
வீமன் அவன் கதையுடன் சுழன்றிட
வீரத்தின் திலகங்கள் வீறுடன் வாறாரே
தகிர்தோம் திகிர்தோம் தளாங்குதோம்.

**தீர்மானம்**

தன்னனானே தன்னனானே தானா - தனன
தன்னனானே தன்னனானே தானா - தனன

**அபிமன்யு :**
ஆற்றல் கொண்ட எந்தன் தந்தாய் - நாமினி
மாளலாமோ கோழைபோல கூறாய் (2)
வேளையொன்று வந்ததிங்கு
வேங்கையென பாய்ந்திடவே
கோழை நெஞ்சைக் கொன்று - இங்கு
வேதனைகள் தீர்ப்போம் வாராய்.

**கடோத் :**
வில்லெடுக்கும் உந்தன் கரத்தோடு - கொடிய
வல்லதலை தானுடைப்பேன் காண்பாய் (2)
கத்தும் கடல் சொல்லவில்லை
நித்தம் ஒரு யுத்தமென்று
செத்துச் செத்துத் தானும் வீழ்வார்
மோசம் செய்த நூற்றுவரே.

(தன்னனானே .....)

**தீர்மானம்**

**அபிமன்யு :**
என்னருமை மூத்த தந்தாய்
இயம்பும் சொல் நீயும் கேட்பாய்
வஞ்சனைகள் செய்தார் அந்த
நஞ்சுகொண்ட நூற்றவரே

கடோத் : இந்த நிலை தானும் மாற்றி
வந்த துன்பம் போக்கிடுவோம்
எந்தன் உடல் வீழும் - அன்றேல்
எதிரி உயிர் தானும் கொள்வேன்

தர்மன் : சீற்றம் கொண்ட வீரனே நீ
சிறுமை கண்டு பொங்கிட்டாயே
வேதனைதான் வாழ்க்கை அல்ல
விடியும் வேளை வருமே காண்பாய்
கனலெனவே எழுந்திட்டாலே
கடும் பகையும் கலங்கி ஓடும்
எதிரிகளை வென்று நீரும்
எழிலரசு தான் படைப்பீர்

தீர்மானம்

அபிமன்யு : களம் கண்டு ஜெயம் காண்போம் - வாராய்
காலம் கவிபாடும் எம் வீர நாதம் (2)
எட்டுத்திக்கும் வெற்றி எட்டும்
மெட்டுக்கட்டி சங்கொலிக்கும்
வானம் கூடத் தூரமில்லை
வாழ்வோம் நாமும் மானம் காத்து

கடோத் : உத்திரையின் காதலனே போய்வா - அந்த
சித்திரைக்குச் சேதி சொல்லி நீ வா
வீடிழந்து நாடிழந்து
காட்டில்வாழும் காலம் மாறும்
கேடுசெய்த கௌரவரை
கூறுசெய்து நாடு கொள்வோம்.

தருமன் : என்னுடைய வீர மக்கள் வாரீர் - கொடிய
பகை வென்று நாமும் வாழ்வோம் நாளை (2)
தர்மம் என்றும் தோற்பதில்லை
தர்மன் சொல்லும் பொய்ப்பதில்லை
நல்ல சேதி நாளை சொல்ல
ஆசிதந்தேன் போரில் வெல்ல

(தன்னனானே தன்னனானே..)

## காட்சி 2

(உத்திரை - தோழி)

வரவுகவி : ஆற்றல் நிறைந்தவனை கரம்பிடித்து காத்தவனை
தூற்றல் நிறைந்தபடி விழிகளில் நீரைக்கோர்த்து
அம்மி மிதித்த நாளை அருந்ததி பார்த்த நாளை
விம்மி உடலும் நோகும் உத்திரை நிலையும் பாரீர்



தன்னனானே தானே தானே - தன தன்னதானே
தானே தானே (2)

உத்திரை : என்னுயிரே எங்கு சென்றாய் - எந்தன்
துயர்தனை நீ அறிந்து கொள்வாய் (2)
கானல் நீரோ எங்கள் வாழ்வு - சோகக்
கானந்தானோ எங்கள் ராகம் (2)

(தன்னதானே .....)

கைபிடித்தேன் அன்று நானே - தோழி
காணவில்லை எந்தன் மூச்சை (2)
நல்ல சேதி நீயும் கூறு - நானும்
மகிழும் நிலை என்று தோன்றும்.

(தன்னதானே ....).

தோழி : கலங்கிடாதே எந்தன் தோழி - நாளை
வசந்தம் வரும் உன்னைத்தேடி (2)
போர் மூண்டதே நீ அறிவாய் - நல்ல
காலம் வரும் நாளை பாராய் (2)

(தன்னதானே .....).

உத்திரை : விண்ணில் ஓடும் மேகங்களே - எந்தன்
வீரனிடம் சொல்லுங்களே - சேதி
வீரனிடம் சொல்லுங்களே (2)

## காட்சி 3

(துரியோதனன் - கர்ணன் - துரோணர் - சகுனி)

வரவுகவி : சங்கும் மணிமுரசும் சல்லரியும் தாரைகளும்
எங்கும் இசையெழுப்பி எழில் கொஞ்சும் இன்பநாட்டில்
படைகொண்டு பகைவர்க்கு பாடை ஈந்த வீரமன்னன்
துரியோதனன் - துரோண - கர்ணனுடன்
சகுனியும் வருகின்றாரே

தந்தனத்தோம் தன தானா தானினத்தோம் தனதானா
தந்தன தனதன தானின தனதன
தந்தனோம் தன தனனா

துரியோதனன் : என்னருமை வீரரே நீர் இயம்பும் சொல் கேட்டிடுவீர்
பகை கொண்ட பாண்டவரும் படைகொண்டு குதித்திட்டார்
சீற்றமே கொண்டிங்கு ஏற்றமே கண்டிட
ஏற்புடை தான் சொல்லுவீர்

கர்ணன் : நூற்றுவரில் மூத்தவனே வேதனையில் காத்தவனே
தூற்றுகின்ற என் வாழ்வை பார்போற்ற செய்தவனே
தோல்விகள் எனக்கில்லை தோள்வலி பல கொண்டேன்
வேதனை போக்கிடுவேன்

(தந்தனத்தோம் ......)

சகுனி : மன்னவனே மருமகனே கௌரவரில் காவலனே
பாண்டவரை பதறடித்து மாயம் செய்த மாமனைப்பார்
அச்சங்கள் அகற்றி நீ அஞ்சிடா நிலை கொள்வாய்
மிச்சமே நான் முடிப்பேன்

துரோணர் : அறிவுகெட்ட மாமனே நீ மதிகெட்டுப் போனாயோ
வஞ்சனைகள் செய்து அந்த வஞ்சியை இஞ்சித்தாயே
கௌரவர் மானத்தை கவிழ்த்திட்ட பாவி நீ
நாசம் இனி உரைக்காதே.

(தந்தனத்தோம் ......)

துரியோதனன் : பாண்டவரின் வலிமை கண்டு பயந்திட்ட குருவே நீரும்
துள்ளி வரும் எம்படையின் ஆற்றல்தனை அறியீரோ
அண்டமும் குலுங்கிட அகிலமும் நடுங்கிட
போரிடும் வலிமை காண்பீர்.

துரோணர் : வேண்டாம் மன்னா விபரீதம் வேதனைகள் தான் மிஞ்சும்
பாண்டவரின் நட்பு கொண்டு பேரழிவை நீ தடுப்பாய்
போரிட என் மன வேர்கூட அஞ்சாது
என்னுடல் உனக்களிப்பேன்

(கிருஷ்ணன் தூது)

வரவுகவி : பேர்கொண்ட விஜயனுடன் பெருநட்பு தான் பூண்ட
சீர்கொண்ட நட்புவாழ தேரோட்டும் மாயக்கண்ணன்
'போர் வேண்டாம் ஊர் கொள்க' தருமனின் தூது கொண்டு
கார் வண்ண கமலக்கண்ணன் அடைந்திட்டான்
அரவன் சபைக்கு

தன்னானே தானின தானின தன்னானே தானின தானின
தன்னானே தானின தானின
தன்னானே தானின தானா
தந்தன தனதன தந்தன தனதன
தனத்ததானா தனத்ததானா
தனத்த தானின தானின தானா....

கிருஷ்ணன் : கௌரவ தலைவனே நீயும் - தூது என்
சொல்லது கேட்பாய் (2)
போர் வேண்டாம் ஊரது போதும்
நேர் நின்ற தர்மன் சொல் காப்பாய்
சொந்தங்கள் பந்தங்கள் சுற்றமும் உற்றமும்
செத்துதான் வீழ்வதோ மொத்தமாய் மாள்வதோ
அறிவு கொள்வாய் புத்தி தெளிவாய்
பாண்டவர் அரசதை பரிவுடன் தருவாய்



துரியோதனன் : ஆநிரை மேய்த்திடும் கண்ணா
அறிவுரை சொல்லவோ வந்தாய் (2)
எரிமலை எழுந்தது கண்டு
ஏன் நீயும் தூதாக வந்தாய்
பிச்சைகள் கேட்டு வாழ்வது வாழ்வா
எச்சங்கள் கூட நிச்சயம் காட்டோம்
கதைகள் உண்டு சதைகள் காண்போம்
பொறிபட உடைத்து நெறிபடவாழ்வேன்
(தன்னானே தான்னதானின...)

கிருஷ்ணன் : கொடுமையின் அடிமையே நீயும்
குலத்துடன் அழிந்துமே போவாய்
பாண்டவர் அரசது கொள்வார்
பார்ப்பாய் என் சொல்லதன் வன்மை
படைகளும் சிதறிடும் தடைகளும் உடைபடும்
தொடையதும் சிதறியே
குருதியும் பெருகிடும்
உறுதி கொண்டேன் உண்மை வெல்லும்
அரி - பரி - கரி - படை கொண்டிட்டோம் காண்பாய்.

கர்ணன் : வில்லேந்தும் வீரர்கள் வாழும்
பண்பாடும் எம்திருநாடு
சொல்லேந்தும் கோழைகள் அல்ல
சொல்வாய் இதை விரைவுடன் சென்று
அக்கினி கக்கும் அம்புகள் உண்டு
நஞ்சுகள் கொண்ட நாகங்கள் உண்டு
வீறுகொண்டோம் வெற்றிகொள்வோம்
கூறுகள் செய்தவர் படைகளை அழிப்போம்.
(தன்னானே தானினதானா...)

(அபிமன்யு வரல்)

தனனம் தனதன தனனம் தனதன
தனனம் தனதன தானா
தனனம் தனதன தனனம் தனதன (2)
தனனம் தனதன தானினா

அபிமன்யு : எனது காதலி இனிய துணையே வா
ஏனின்று ஏக்கம் நீ கொண்டாய் - நீல நயனங்கள்
நிலவின் குளுமையோ - முள்ளாய்
குத்துதே என் செய்வேன்

உத்திரை : எனது காதலா அருமை நாயகா
வில்லாதி வீரனின் புதல்வா - உதய சூரியன்
வரவு கண்டிங்கு
மலரும் என்னை நீ ஏற்பாயே
(தனனம் தனதன...)

**அபிமன்யு :** அன்னமே உன்னை நான் மறப்பதெங்கணம்
உண்மையே இதை நீயும் உணர்வாய் - வானம்பாடிகள்
போல நாம் பறந்திட
வானம் எமக்கில்லை மறந்தாயோ

**உத்திரை :** வள்ளலே காவலா உன்னிலே பாதி நான்
உன் சோகம் அறிவேன் நான் கலங்காதே - போரது
மூண்டிட்ட செய்தியும் நான் கேட்டேன்
என் மனம் பதறுதே என் செய்வேன்

**அபிமன்யு :** வில்லது தோளிலே தாங்கிட்ட வீரன் நான்
சொல்லது கூறுவேன் கேட்பாயே
மானம் இழந்தபின் வாழ்வதில் பயனில்லை
வாழ்த்தி விடைகொடு வருகின்றேன்.

(தனனம் தன தன..)

### காட்சி 4

**(அபிமன்யு - துரோணர் - சகுனி போர்)**

**அபிமன்யு :** கொஞ்சம் கூட வீரம் இல்லா
வஞ்சகனே வாடா இங்கே (2)
வெஞ்சமரும் தான் புரிவோம் வேகமாய்
ஏது நீயும் இந்தப்பக்கம்
சூது இல்லை தோற்றுப்போவாய்
வீரர் குல மன்னன் என்ற எண்ணமா?

**சகுனி :** பகடையும் நான் எறிவேன்
பகை உன் தலையும் நான் அரிவேன் (2)
விடை கூறி வந்தனையோ போருக்கு
பால் பொங்கும் முகமும் கொண்டாய்
வேல் பாய்ந்தால் செத்துப்போவாய்
நீறு பூத்த நெருப்பு நான் தீண்டாதே.

தந்தனம் தனத்ததானா தந்தனம் தனத்ததானா
தந்தனம் தனத்தனா தந்தனம் தனத்த தானா
தந்தனம் தனத்ததான தானினா

**அபிமன்யு :** தூக்கியெடும் உந்தன் வில்லை
துரோணரே நல் குருவே நீரும் (2)
பாக்கி கூட இன்னும் உண்டு பயிலுவோம்
கண்டதில்லை எந்தன் வித்தை
வீழ்த்திடுவேன் உம் தலையை
அர்ச்சுனனின் வீரமகன் பார்த்திடும்



**துரோணர் :** அப்பனிடம் கேட்டிருந்தால் (2)
செப்பிருப்பான் என் புகழை
அம்பு உண்டு வம்பு வேண்டாம் வீரனே
மலை நானே மோதிடாதே
மாய்த்திடுவேன் உன்னை நானே
மாளும் காலம் வந்ததுவோ கூறடா?

(தந்தனம் தனத்ததானா...)

### காட்சி 5

**(கர்ணன் - வீமன் போர்)**

தந்தனம் தனதன தனதன தனதானா தன்னானே தானா
தந்தனம் தனதன தனதன தானா
தந்தனம் தனதன தனதன்னத் தானா
தந்தனோம் தனதன தனதன்னத் தானா

**கடோத் :** அங்கத்தின் சிங்கமே என் கதை மோதிட வா
உயிர் ஆசை விட்டே
ஆள்பலம் எனக்கில்லை தோள்பலம் காண்பாய் நீ
தேரோட்டி மைந்தா
துண்டாடி உன் உடல் வதைத்துமே கொல்வேன்
மன்றாடி கேளு மறுஜென்மம் தாரேன்
காட்டினில் தீயென எழுந்திட்டோம் பாராய்
கருகிடும் உன் உயிர் உதிர்ந்திட்ட பூவாய்

**கர்ணன் :** அரக்கத்தின் உருவமே இரக்கமே காட்டேன் வா
கொல்வேனே உன்னை
என்னிடம் என் வந்தாய் எமனிடம் போகவா நீ
விரைவாகக் கூறு
அண்டமும் பொடிபடும் என் கதை உயர்ந்தால்
திண்டாடி ஓடி உன் கானகம் சேர்வாய்
இடும்பியின் கணவனே கடும்பகை நானே
இக்கணம் கொல்வேன் மாமிச மலையே

(தந்தனம் தனதன....)

### காட்சி 6

**(துரியோதனன் - கர்ணன் - சகுனி - துரோணர்)**

தன்னனானே தன்னனானே - தன்னானே
தன்னனானே தன்னனானே
தன்னன்னானே தன்னன்னானே
தன்னன்னானே தன்னன்னானே
தன்னன்னானே தன்னன்னானே
தன்னன்னானே தன்னன்னானே

வரவுகவி : களமதில் புகுந்தவீரன் கனலென சுழன்றதாலே
உளமதில் நோவும் கொண்டு உயிர்தனை காக்கஓடி
நூற்றுவ வீரர்தானும் தோற்றுவார் யாரும் இன்றி
கோபத்தின் விளிம்பில் நின்று குதித்திங்கு வருகின்றாரே
(தன்னனானே தன்னனானே .....)

துரியோதனன் : எப்படியடா பொறுப்பேனோ - கொடியசெயல்
எப்படியடா பொறுப்பேனோ
எப்படித்தான் நான் பொறுக்க
இப்படியும் வந்ததுண்டோ (2)
வில்லும் வேண்டாம் வேலும் வேண்டாம்
செல்வீர் நீரும் யாகம் செய்ய
(தன்னனானே தன்னனானே...)

கோழையென்று என்று எண்ணிவிட்டானே - பொடிப்பயல்
வீரம் காட்டி வெற்றி கொண்டானே
சேலையொன்று நாம் உடுக்கும்
வேலை அவன் காட்டலாமோ
கொள்ளி வைக்க பிள்ளை வேண்டாம்
கிள்ளி எறி அவன் தலையை
(தன்னனானே தன்னனானே...)

**தீர்மானம்**

கர்ணன் : என்னருமை மன்னவனே
ஈனச்செயல் நான் துடைப்பேன்
வேதனை நீ அகற்றி கொள்வாய்
வெற்றி கொள்வேன் அவனைக் கொன்றே

சகுனி : யுத்தமதில் தர்மம் பார்த்தால்
நாமழிவோம் இதுவே உண்மை
தந்திரமாய் வளைத்து அவனை
நாசம் செய்வோம் நாளை போரில்.

துரோணர் : கோபம் நீயும் அகற்றி நானும்
கூறும் வார்த்தை அதனை கேட்பாய்
நாளை போரில் அவனைக் கொல்ல
நல்ல திட்டம் நானும் சொல்வேன்
சக்கரவியூகமும் கொண்டால் - தனியே
வந்து சமரும் செய்வான்
அக்கணமே அவனைக் கொல்ல
ஏற்ற வேளை இதை நீ கொள்வாய்

**தீர்மானம்**

## காட்சி 7

**(தர்மன் - அபிமன்யு)**

அபிமன்யு : ஏனோ இந்த சோகக்கோலம் தந்தாய் - இந்த
மலையும் கூட கலங்கலாமோ
மகனிடம் நீ கூறாய்



தர்மன் : ஆற்றல் கொண்ட என்னுடைய புதல்வா
துரோண குருவும் அமைத்த வியூகம் வளர்ந்தால்
அழிவோம் நாமும் உண்மை

அபிமன்யு : அர்ச்சுனனின் வீர மகன் நானே - தாயின்
கருவில் அன்று கற்றுக்கொண்டேன்
வியூகம் உடைப்பேன் வருவாய்

தருமன் : வென்று வர ஆசி தந்தேன் - போய்வா
உன் பின்னே வந்து பகையை கொல்வோம்
வெற்றி நமதே காண்பாய்.

## காட்சி 8

**(அபிமன்யு - கர்ணன் - துரியோதனன்)**

அபிமன்யு : கர்ணனே இங்கு சாகவோ வந்தாய் நீ
நீசனே உந்தன் உயிர்தனை எடுப்பேனே
ஆற்றிலே அன்று அலைந்திட்ட துரும்பே - என்
ஆற்றலை நீ அறிந்திடு இன்றுடன்

கர்ணன் : பாரடா எந்தன் வீரத்தின் தன்மையை
ஓடடா உந்தன் உயிர்தனை காத்திட
சீற்றமே கொண்டேன் சிறுவனே பாரடா
நாறியே சாவாய் நானிலம் மீதிலே
(தன்னனா தன தானின...)

அபிமன்யு : கர்வமே பூண்ட கயவனே வாடா நீ
கவர்வேனே உன் உயிர்தனை இன்றுடன்
அடிமையாய் நாங்கள் உன்னிடம் வாழ்வதோ
எரிமலை இன்று வெடித்தது பாரடா

துரியோதனன் : வீங்கிடும் எந்தன் தோளதின் மீதிலே
தாங்கிடும் கதை வதைசெய்யும் உன்னையே
பொங்கிடும் வீர புஜபலம் கொண்டிட்டேன்
சிந்திடும் உந்தன் குருதியும் மண்ணிலே
(தன்னனா தன தானின..)

**(போர்)**

**(முடிவில் அபிமன்யு இறக்கின்றான்)**

இறுதிப்பாடல்

கயவர்கள் சேர்ந்து ஒன்றாய்
கலைத்தனர் வீரன் ஆவி
வீழ்ந்துமே மடிந்ததிங்கே
வீரத்தின் வித்து அன்று
கருவினில் கற்றவித்தை
கலங்கியே பகையும் ஓட
வஞ்சகம் சிரித்ததன்று
நெஞ்சமும் அழிந்திடவே

| | | |
|---|---|---|
| பங்குபற்றியோர் | : | அருட்சகோதரர் சூ. கருணாகரன் |
| | | பா. சாய்ஸ்கந்தன் |
| | | கி. லே. ஜுட் முரளிதரன் |
| | | க. நரேந்திரநாதன் |
| | | கி. ம. மொறாயஸ் |
| | | ம. அமுதராஜ் |
| | | ம. சுபேந்திரன் |
| | | ந. கல்யாணி |
| | | ச. கிருபால் |
| | | சி. மேனகா |
| பிற்பாட்டு | : | ப. பிரதீபன் |
| | | சு. கீதாஞ்சலி |
| | | சி. சபேசன் |
| | | வை. மஞ்சுளா |
| | | சி. ஜெயசீலன் |
| | | தி. விஜயரேகா |
| | | பெ. ஜெயக்குமார் |
| | | வி. சுகர்ணா |
| டோலக் | : | சி. பகீதரன் |
| பொங்கற் | : | ப. பிரதீபன் |
| ஒளியமைப்பு | : | சி. பிரபாகரன் |
| | | தா. ஸ்ரீராமநாதன் |
| | | ந. முரளிதாஸ் |
| ஒப்பனை | : | தி. பாலகுமார் |
| | | வே. கஜேந்திரன் |
| | | ந. யோகராஜா |
| | | பா. சஞ்சயன் |
| | | ந. மதிவளன் |
| பிரதியாக்கம் | : | கி. லெ. ஜுட். முரளிதரன் |
| நெறியாள்கை | : | கி. லெ. ஜுட் முரளிதரன் |
| | | சி. சபேசன் |
| | | பா. சாய்ஸ்கந்தன் |
| | | ப. பிரதீபன் |
| | | தா. ஸ்ரீராமநாதன் |